459

…த்ரமாலை — 3-வது மலர்

ஸ்ரீ:

ஸ்ரீ ஆளவந்தார்

அருளிச்செய்த

ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்

இஃது

பிள்ளைப்பாக்கம் இளையவல்லி

லக்ஷ்மீ நரசிம்மா சாரியரால்

தமிழில் பாசுரங்களாக மொழிபெயர்க்கப்பட்டு

கருத்துரையுடன் அமைக்கப்பட்டு

சென்னை

"கார்டியன்" அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது

1918

காப்பி ரைட்

Q2:417
N18
59540

ஸ்தோத்ரமாலை. 3 வது மலர்

ஸ்ரீ ஆளவந்தார்

அருளிச்செய்த

ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்

இஃது

பிள்ளைப்பாக்கம் இளையவல்லி

லக்ஷ்மீநரசிம்மாசாரியரால்

தமிழில் பாசுரங்களாக மொழிபெயர்க்கப்பட்டு

கருத்துரையுடன் அமைக்கப்பட்டு

சென்னை

“ கார்டியன் ” அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது

1918

காபிரைட்

ஸ்ரீ:

𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰𑌰𑌤𑍍𑌨𑌮𑍍.

𑌸𑍍𑌵𑌾𑌦𑌯𑌨𑍍𑌨𑌿𑌹 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌤𑍍𑌰𑌯𑍍𑌯𑌨𑍍𑌤𑌾𑌰𑍍𑌥𑌂
𑌸𑍁𑌦𑍁𑌰𑍍𑌗𑍍𑌰𑌹𑌮𑍍 ।
𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰𑌯𑌾𑌮𑌾𑌸 𑌯𑍋𑌗𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 𑌤𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇
𑌯𑌾𑌮𑍁𑌨𑌾𑌹𑍍𑌵𑌯𑌮𑍍 ॥

𑌨𑌮𑍋 𑌨𑌮𑍋 𑌯𑌾𑌮𑍁𑌨𑌾𑌯 𑌯𑌾𑌮𑍁𑌨𑌾𑌯 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃 ।
𑌨𑌮𑍋 𑌨𑌮𑍋 𑌯𑌾𑌮𑍁𑌨𑌾𑌯 𑌯𑌾𑌮𑍁𑌨𑌾𑌯 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃 ॥

𑌨𑌮𑍋𑌽𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑍍𑌭𑍁𑌤𑌾𑌕𑍍𑌲𑌿𑌷𑍍𑌟
𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌰𑌾𑌶𑌯𑍇 ।
𑌨𑌾𑌥𑌾𑌯 𑌮𑍁𑌨𑌯𑍇𑌽𑌗𑌾𑌧
𑌭𑌗𑌵𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌿𑌸𑌿𑌨𑍍𑌧𑌵𑍇 ॥ 1 ॥

சிந்தையினுக்கெட்டாமே சிறந்தருளா லெளிதிலகி
விந்தையுறு மெஞ்ஞான விரக்திக் களஞ்சியமாய்
பைந்துளவ பகவான் மீதுறு பக்திக் காழ்கடலா
1 மந்தணனுமந் நாதமுனிக ளடிபணிவேனே (1)

(க-வை.) மனதினல் அளவிடக்கூடாததாயும், அறிந்தமட்டில் ஆச்சரியத்தை விளைவிப்பதாயும், பகவானுடைய கிருபையால் வந்தகாரணத்தால் சிரமமற்றிருப்பதாயு முள்ள

1 அந்தணன் - அந்தத்தை அணவுவான் (கிட்டுவான்) முனிவன்.

விலக்ஷணமான ஞானமும் (அந்த ஞானத்தாலே யுண்டான) வைராக்கியமும் ஆகிய இவைகளுக் கிருப்பிடமானவரும் துளசிமாலை தரிக்கும் பகவானிடத்தி லுண்டான பக்திக்கு நிலைக்காத ஸமுத்ரம் போன்றவரும், முனிசிரேஷ்டருமான அந்த ஸ்ரீமந் நாதமுனிகளுக்கு நமஸ்காரம் பண்ணுகின்றேன்.

𑌤𑌸𑍍𑌮𑍈 𑌨𑌮𑍋 𑌮𑌧𑍁𑌜𑌿𑌦𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌸𑌰𑍋𑌜𑌤𑌤𑍍𑌤𑍍𑌵
𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑍁𑌰𑌾𑌗𑌮𑌹𑌿𑌮𑌾𑌤𑌿𑌶𑌯𑌾𑌨𑍍𑌤𑌸𑍀𑌮𑍍𑌨𑍇 ।
𑌨𑌾𑌥𑌾𑌯 𑌨𑌾𑌥𑌮𑍁𑌨𑌯𑍇𑌽𑌤𑍍𑌰 𑌪𑌰𑌤𑍍𑌰 𑌚𑌾𑌪𑌿
𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌯𑌦𑍀𑌯𑌚𑌰𑌣𑍌 𑌶𑌰𑌣𑌂 𑌮𑌦𑍀𑌯𑌮𑍍 ॥ 2 ॥

மதுவை வென்ற நெடியமாலின்
மரை மலர்ப்பதத்தின் கண்
முதிருந் தத்வஞான மோக
மகிமை முற்று மோர்ந்துயர்
1 விதுர னுத னுமெனுத
முனிகளை 2 வியப்பனே
கதியெனக் கவன் கழல்க
ளிங்கு மங்கு மென்றுமே. (2)

(க - ரை). மதுவென்னும் அசுரனை ஸம்ஹரித்த (ஆச்ரித விரோதி நிவர்த்தகனான) திருமாலின் திருவடித்தாமரைகளின் விஷயமாய் முதிர்ந்திருக்கும் தத்வஞானமும் (அதாவது, அத்திருவடிகளே மோக்ஷத்திற்கு உபாய வுபேயம் என்னும் ஞானம்), (அனுபவித்தாலல்லது தரிக்கவொண்ணாத ஒரு) பிரேமமுமாகிய இவற்றின் மகிமையை முற்றும் உணர்ந்தவரும், மகா ஞானியாயும் நமக்கு ஸ்வாமியுமான ஸ்ரீமந்

1 விதுரன் - அறிஞன். 2 வியத்தல் - துதித்தல்.

2:417 N18
69540

நாதமுனிகளை நமஸ்கரிக்கின்றேன். இவருடைய திருவடிகளே இம்மையிலும் மறுமையிலும் எக்காலத்தும் எனக்குக் கதியாகும்.

ஹூயொ நமொசவரிசிதாவுறூ ஹக்தூதகூ
ஜூாநாமூதாஜூி வரிவாஆ ஸஹெஹவுவோஹிஃ ।
ஸொகெசவ தீணூ வூூாயூ ஷஉறூஹக்தி
யொமாய நாயூ உஜநயெ யதிநாஂவராய ॥ 3 ॥

[1] அச்சுதற் களப்பிலாத
பத்தி தத்வ ஞானமா
மச்சுதைக் கடற் பெருக்
கெனத் தரைச் சுபச்சொலான்
மெச்சி மெய்ப்பலன் விளைக்கும்
பக்தியோக கர்த்தனை
நச்சி நான் றுதிப் பணின்னு
நாதனு முனீந்த்ரனே (3)

(க - ரை). ஸர்வேச்வரன் விஷயத்தில், அளக்கவொண்ணாத பக்தி, தத்வஞானம் ஆகிய அந்த அமுதக்கடலானது (உள்ளடங்காது மேலே) பொங்கியதுபோல, மதுரமான சொற்களால், பரம ப்ரயோஜன ரூபமாயும், பரிபூர்ணமாயுமிருக்கிற பக்தியோகத்தை அன்புகூர்ந்து இவ்வுலகத்தில் பிரகாசிக்கும்படி செய்தவரும், முனிவர்களுக்குள் சிரேஷ்டராயும் அவர்களாலும் பூஜிக்கத்தக்கவருமான அந்த நாதமுனிகளை மறுபடியும் நான் வணங்குகின்றேன்.

தவெஙந யஸ்ஷிவிதீஸ்ர தத்ஹாவ
ஹொமாவவமூ தஷூவாய மதீரஷாரஃ ।

---

1 அச்சுதன் - ஆச்ரிதர்களை ஒருக்காலும் நழுவவிடாதவன்.

ஸந்தர்ஶயந் நிரமிமீத புராணரத்நம்
தஸ்மை நமோ முநிவராய பராஶராய ॥ 4 ॥

தத்துவத்தின் சித்தசித்தொ
 டீச னென்னுந் தன்மையு
முத்திபோக சாதனத்து
 பாய மார்க்க முழுமையும்
வித்தரித்த மெய்யுரைப் பு
 ராண ரத்ந மீதருஞ்
சத்துவப்[1] பராசர மு
 னீந்திரன் முன் தாழ்வனே (4)

(க - ரை). சேதனம், அசேதனம் என்னும் இவைகளின் ஸ்வரூபங்களையும், இவ்விரண்டு தத்வங்களுக்கும் ஸ்வாமியான ஈச்வர ஸ்வரூபத்தையும், இம்மூன்றின் தன்மைகளையும் (யாவருக்கும் அனுபாவ்யமான) போகங்களையும், மோக்ஷத்தையும், (இவற்றை யடைதற்குரிய) உபாய மார்க்கங்களையும், முழுமையு முணர்ந்து பிறருக்கு விசதமாய் விளங்கச் செய்பவராய் (பொருளை விளக்குவதிலும் ஆத்ம ரக்ஷணத்திலும்) ரத்நம் போன்றதான ஸ்ரீவிஷ்ணு புராணத்தைச் செய்தருளினவரும், முனிச்ரேஷ்டருமான பராசரமுனிவர் முன் வணங்குகின்றேன்.

மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதி:
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம் ।
ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத் ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா ॥ 5 ॥

---

1 பராசரன் - பரசமயங்களை பிரமாண சரங்களால் நிரஸித்தவன்.

என்னிட வமிசத் தார்களுக் கெக்கா
லத்திலு மிணையிலா தமரு
மன்னையு மத்தன் றனுமோ ரினிய
வரிவையு மாக்கமு மகவும்
பின்னுமேலாய பேறுகள்யாவு
மாகு மெங்குல பதியாமம்
மன்னுசீர் மகிழ மாலையார் மாற
னடியிணைத் தலை வணங்குவனே. (5)

(க-ரை) என் வமிசத்தார்களுக்கு எக்காலத்திலு மிணையில்லாமலமர்ந்து, (பிரியத்தைச் செய்வதில்) தாய்போன்றவரும், (ஹிதத்தைச் செய்வதில்) தந்தை போன்றவரும், (இன்பம் விளைப்பதில்) ஒரு அருமையான ஸ்திரீ போன்றவரும், (பாதுகாப்பதில்) புத்ரனைப் போன்றவரும், (எல்லாவற்றையும் ஸாதிப்பதில்) தனத்தைப் போன்றவரும், இவ்விதம் இன்னும் பலவாய உத்தமமான ஸம்பத்து போன்றவரும், எங்கள் குலத்துக்கு பரமாசார்யரும், மகிழமாலை யணிந்து விளங்குபவருமான அந்த நம்மாழ்வாருடைய திருவடியிணையைத் தலைவணங்குகின்றேன்.

𑌯𑌨𑍍𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑌿 𑌮𑍇 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌶𑌿𑌰𑌸𑍍𑌸𑍁 𑌚 𑌭𑌾𑌤𑌿 𑌯𑌸𑍍𑌮𑌿
𑌨𑍍𑌨𑌸𑍍𑌮𑌨𑍍𑌮𑌨𑍋𑌰𑌥𑌪𑌥𑌃 𑌸𑌕𑌲𑌸𑍍𑌸𑌮𑍇𑌤𑌿 ।
𑌸𑍍𑌤𑍋𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌨𑌃 𑌕𑍁𑌲𑌧𑌨𑌂 𑌕𑍁𑌲𑌦𑍈𑌵𑌤𑌂 𑌤𑌤𑍍
𑌪𑌾𑌦𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑌮𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑌵𑌿𑌲𑍋𑌚𑌨𑌸𑍍𑌯 ॥ 6 ॥

இலகு மென் சென்னி மீது
மின்மறை முடியின் மீது
மலகி லென் மனத்தினிச்சை
யகிலமு நாடு மெங்கள்

குலதனங் குலத்தின் தெய்வங்
கோமளக் கமலக் கண்ணன்
மலருமம் மரை மலர்த்தாள்
மனமுறப் புகழ்வ னன்றே. (6)

(க-ரை) எந்த புண்டரீகாக்ஷனுடைய திருவடி என் சிரஸ்ஸிலும் வேதாந்தங்களின்மீதும் ஒக்க பிரகாசிக்கின்றதோ, எந்த திருவடியில் என் இச்சையின் வழிகள் யாவும் செவ்வனே சென்றடைகின்றனவோ, எது என் குலத்திற்குத் தனமாயும் தெய்வமாயு மிருக்கின்றதோ அந்த திருவடியை என் னெஞ்சாரத் தோத்திரம் பண்ணுகின்றேன்.

தத்த்வேந யஸ்ய மஹிமார்ணவ ஶீகராணு:
ஶக்யோ ந மாதுமபி ஶர்வபிதாமஹாத்யை: ।
கர்தும் ததீய மஹிமஸ்துதி முத்யதாய
மஹ்யம் நமோऽஸ்து கவயே நிரபத்ரபாய ॥ 7 ॥

அன்னவன் மகிமை வெள்ளத்
திவலையி னணுவையேனு
மின்னதென் றுள்ள தோர[1]
விறை சிவாதியர்க்கு மொண்ணு
மன்னுமம் மகிமை பாட
மான மற்றெத்தனித்த
வென்னையும் வணங்குவேனு
னிந்த ஸாஹஸச் செயற்கே (7)

(க-ரை) எந்த ஸர்வேச்வரனுடைய குணக்கடலின் சிறு திவலையில் அணுமாத்திரத்தையும் உள்ளபடி யளந்தறிவதற்கும் (ஞானாதிகனான) சிவனாலும் (அவனுக்குபதேசம்

1 ஓர்தல்—ஆராய்தல் தெளிதல்.

செய்த) பிரமனாலும், (பிரமனுக்கு ஸமானமான) ஸநகாதி களாலும் முடியாதோ, அத்தன்மையானுடைய குணங்களை ஸர்வப் பிரகாரத்தாலும் ஸ்துதிப்பதென்கிற இந்த ஸாஹஸத்தைச் செய்ய வெட்கமில்லாமல் எத்தனித்த எனக்கும் நமஸ்காரம்.

யத்வா ச்ரமாவதி யதாமதி வாப்யசக்த:
ஸ்தௌம்யேவமேவ கலு தேऽபி ஸதா ஸ்துவந்த: ।
வேதாச்சதுர்முகமுகாச்ச மஹார்ணவாந்த:
கோ மஜ்ஜதோரணுகுலாசலயோர்விசேஷ: ॥ 8 ॥

சத்தியில னாகிலும் யான் தளர்ச்சி யெய்திச்
சகிக்கவினித் தாமில்லே னென்னுமட்டும்
புத்தியெனக் குற்றளவும் போற்றி நிற்பன்
புகழார்ந்தெக் காலத்தும் பொருந்தி யேத்துந்
தத்துவத்தை யுணர் மறையுஞ் சதுர் முகத்தோன்
சங்கரனா தியர்களுமிங் ஙனமே யன்றோ?
ஒத்திடிலோர் பெருங்கடலு ளமிழ்ந்து மூழ்கு
முயர்மலைக்கு மணுவிற்கும் வாசியுண்டோ. (8)

(க-ரை) (உள்ளபடியே உன்னை ஸ்தோத்ரம் செய்ய) சத்தியில்லேனாயினும் (என் உணர்ச்சியில்) தளர்ச்சியுண்டாகி இனி என்னால் சாத்தியமில்லை யென்னுமட்டுமாவது என் ஞானத்துக்கு எட்டும் வரையிலுமாவது, ஸ்துதி பண்ணுகின்றேன். ஜகத் ப்ரஸித்தமாய் ஆதிகாலந்தொட்டு உன்னை ஸ்துதிக்கும் ஸகல தத்வத்தையுமறிந்த வேதங்களும், சதுர் முகன் சங்கரனாதி மற்றவர்களும் தத்தம் ஞான சக்தியாதி யளவேயன்றோ ஸ்துதிக்கின்றார்கள். ஒரு பெருங் கடலிலே அமிழ்ந்து மூழ்குகின்ற ஒருபெரிய பர்வதத்திற்கும் ஒருஅணு

விற்கும் என்ன வித்யாசமிருக்கிறது? (உள்ளபடி உன்னை ஸ்துதிசெய்ய மாட்டாமையில் வேதம் முதலியவைகளுக்கும் எனக்கும் யாதொருவாசியுமில்லை யென்பது கருத்து.)

கிஞ்சைஷ ஶக்த்யதிஶயேந ந தே(அ)நுகம்ப்ய:
ஸ்தோதாபி து ஸ்துதிக்ருதேந பரிஶ்ரமேண ।
தத்ர ஶ்ரமஸ்து ஸுலபோ மம மந்தபுத்தே:
இத்யுத்யமோ(அ)யமுசிதோ மம சாப்ஜநேத்ர ॥ 9 ॥

உன்னையே துதிப்ப வெய்து
முணர்ச்சியின் தளர்ச்சியன்றி
நின்னருட் குரியதாமோ
நிறை கவித்திறனுஞ் சீரு
மென்னிட மந்தபுத்திக்
கெளி திளைப்பாதல் பற்றி
நன்னலம்[1] நயனுவிந்த
முயற்சியிற் குரியனுனே. (9)

(க - ரை). உன்னைத் துதிப்பதில் இச்சைகொண்டும், அதற்கு வேண்டிய சக்தி யில்லாமையால் புகழவும் தவிரவு மாட்டாமையாலே ஒருவன் படுகிற இளைப்புக்கு இரங்கி நீ அருள்செய்வதே யன்றி, ஸ்தோத்ரம் செய்வதற்கு வேண்டிய பூரணமான சாமர்த்யாதிசயங்களைக் கொண்டு நீ அனுக்ரகிக்கிறதில்லை. இங்ஙனமிருக்க, அற்பபுத்தியேனுன எனக்கு சிரமம் அதிக சுலபத்தில் உண்டாய்விடுகிறது. ஆகையால் (என் ஸ்தோத்ரத்தைத் தலைகட்டும்படி கடாக்ஷிக்கவல்ல) அழகிய திருக்கண்களையுடையவனே! இந்த (ஸ்தோத்ரம் செய்யவேணுமென்னும்) முயற்சிக்கு உரியவன் நானேயாகின்றேன். (எனக்கே அம்முயற்சி தகுந்துள்ளது.)

---

1 நன்னலம் - அழகு.

𑌨𑌾𑌵𑍇𑌕𑍍𑌷𑌸𑍇 𑌯𑌦𑌿 𑌤𑌤𑍋 𑌭𑍁𑌵𑌨𑌾𑌨𑍍𑌯𑌮𑍂𑌨𑌿
𑌨𑌾𑌲𑌂 𑌪𑍍𑌰𑌭𑍋 𑌭𑌵𑌿𑌤𑍁𑌮𑍇𑌵 𑌕𑍁𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 ।
𑌏𑌵𑌂 𑌨𑌿𑌸𑌰𑍍𑌗𑌸𑍁𑌹𑍃𑌦𑌿 𑌤𑍍𑌵𑌯𑌿 𑌸𑌰𑍍𑌵𑌜𑌨𑍍𑌤𑍋𑌃
𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑍍 𑌨 𑌚𑌿𑌤𑍍𑌰𑌮𑌿𑌦𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤 𑌵𑌤𑍍𑌸𑌲𑌤𑍍𑌵𑌮𑍍 . ॥ 10 ॥

நாத நின சங்கற்பமின்றி யுண்டாய்
நன்மையுறு மிருக்கைக்குஞ் சமர்த்தமில்லா
சாதனமா மிப்புவனங்கட்கு மெங்ஙன்
சம்பவிக்கும் பிரவிருத்தி ? யிவ்விதத்தே
யேதுவிலதா யெல்லா வுயிர்களுக்கு
மிதம்புரியு மியற்கையனும் பிரபோ ! நின்றன்
பாதமணி யன்பர்க்கிவ் வாற்சலீயம் [னே
படைத்துள்ளா யென்பதிலோர் விந்தையெ!ன்

(க - ரை). எ! பிரபோ! ஆதியில் நீ ஸங்கற்பித்து கடாக்ஷித்திராவிட்டால் இப்பதினான்கு லோகங்களும் உண்டாயிருப்பதற்கே ப்ரமேயமிருந்திராது. அப்படி யிருக்க, அவைகளுக்கு ப்ரவ்ருத்தி எங்ஙன முண்டாம்? எ! ஸர்வ சேஷியானவனே! பிரமன் முதலிய சகல ஜீவன்களுக்கும் (காரண களேபரங்களைக் கொடுத்துக் குறை தீர்த்தருளிய) சுவபாவமாய் ஸுஹ்ருத்தான உன்விஷயத்தில் ஸ்துதி பண்ண வல்லராம்படி உன் அன்பரைச் செய்வதற்காக உனக்குண்டான வாற்சலீயம் ஒரு ஆச்சரிய மாகுமோ ?

𑌸𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌿𑌕𑌾𑌨𑌵𑌧𑌿𑌕𑌾𑌤𑌿𑌶𑌯𑍇𑌶𑌿𑌤𑍃𑌤𑍍𑌵𑌂
𑌨𑌾𑌰𑌾𑌯𑌣 𑌤𑍍𑌵𑌯𑌿 𑌨 𑌮𑍃𑌷𑍍𑌯𑌤𑌿 𑌵𑍈𑌦𑌿𑌕𑌃 𑌕𑌃 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌶𑌿𑌵𑌃 𑌶𑌤𑌮𑌖𑌃 𑌪𑌰𑌮𑌸𑍍𑌵𑌰𑌾𑌡𑌿𑌤𑌿
𑌏𑌤𑍇𑌽𑌪𑌿 𑌯𑌸𑍍𑌯 𑌮𑌹𑌿𑌮𑌾𑌰𑍍𑌣𑌵𑌵𑌿𑌪𑍍𑌰𑍁𑌷𑌸𑍍𑌤𑍇 ॥11॥

விந்தையா யியற்கை யாமுன்
 [1] விதப்புறு நாயகத்தை
யெந்தமா [2] வைதிகர்தான்
 பொறுத்திலார் நாரணநின்
சிந்துவா மகிமை தன்னிற்
 சிறுதுளியாவரன்றே
[3] நந்திநான் முகன் [4] வலாரி
 முத்தரா மேனையோரும். (11)

(க - ரை). ஏ! நாராயண! இயற்கையாயும் ஆச்சரிய மாயும் உன்னிடத்தமைந்துள்ள உனது ஒப்புயர்வில்லாத உபய விபூதி ஸாம்ராஜ்யத்தை, வேதாந்த ஸாரத்தை அறிந்த எவர்தான்பொறுக்கமாட்டார்? பிரமன் சிவன், இந்திரன், முக்தர் முதலிய இவர்களெல்லோரும், கடல்போன்ற உன் மகிமையில் ஒரு சிறுதுளியே யாகின்றார்களன்றோ?

க: ஶ்ரீ: ஶ்ரிய: பரமஸத்த்வஸமாஶ்ரய: க:
க: புண்டரீகநயந: புருஷோத்தம: க: ।
கஸ்யாயுதாயுதஶதைககலாம்ஶகாம்ஶே
விஶ்வம் விசித்ரசிதசித்ப்ரவிபாகவ்ருத்தம் ॥ 12 ॥

ஆர்திருவினுக்குந்திரு வாகுபவ ரேனார்பரம
 சத்துவ சொரூப முளனார்
ஆர்மலருந் தாமரையின் கண்ணுடையன்யாவன்புரு
 டோத்தம னெனும் பெயருளான்
ஆருடை சொரூபமதி னாயிரத்தாயிரங்
 கோடிபதி னாயிரமதின்

1 விதப்பு - அதிசயம், மிகுதி. 2 வைதிகர் - வேதாந்த ஸாரத்தை யுணர்ந்தவர். 3 நந்தி - சிவன். 4 வலாரி - இந்திரன்.

ஆர்கலையி ேனார் சிறிய பாகமதிலகிலபிர
பஞ்சமு மடங்கியுளதே ? (12)

(க - ரை). திருவினுக்கும் திருவாகுபவன் யாவன் ? (ஸ்ரீ மகாலக்ஷ்மிக்கும் ஒரு ஸம்பத்தா யமைந்துள்ளவன் யவன் ?) சுத்த ஸ்த்வஸ்வரூபமுடையவன் நீ யல்லாமல் வேறு யவன்? (ஸர்வேச்வரத்வத்தைக் குறிப்பிக்கும்)மலர்ந்த தாமரைபோன்ற திருக்கண்களை யுடையவன் வேறு யாவன் ? புருஷோத்தமன் என்னும் பெயரையுடையவன் உன்னிலும் எவன் ? சரீர போக்யாதிகளால் அத்யந்தம் வேறுபட்டிருக்கிற சேதனு சேதனங்களுடைய வியாபகத்தோடு கூடிய) அகில ப்ரபஞ்சமும் உன்னை விட மற்றெவனுடைய ஸ்வரூபத்தில் பலகோடி நூராயிரங்களின் ஒரு சிறுபங்கில் அடங்கியிருக்கின்றது ?

𑌵𑍇𑌦𑌾𑌪𑌹𑌾𑌰 𑌗𑍁𑌰𑍁𑌪𑌾𑌤𑌕 𑌦𑍈𑌤𑍍𑌯𑌪𑍀𑌡𑌾
𑌦𑍍𑌯𑌾𑌪𑌦𑍍𑌵𑌿𑌮𑍋𑌚𑌨 𑌮𑌹𑌿𑌷𑍍𑌠 𑌫𑌲 𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑍈𑌃 ।
𑌕𑍋𑌽𑌨𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾 𑌪𑌶𑍁𑌪𑌤𑍀 𑌪𑌰𑌿𑌪𑌾𑌤𑌿 𑌕𑌸𑍍𑌯
𑌪𑌾𑌦𑍋𑌦𑌕𑍇𑌨 𑌸 𑌶𑌿𑌵𑌃 𑌸𑍍𑌵𑌶𑌿𑌰𑍋𑌧𑍃𑌤𑍇𑌨 ॥ 13 ॥

வேதமபகாரமுறு நாளிலுங் குரூர குரு
பாதகம் விளைநாளினுந்
தீதரசுரர் செயிட ராதிபல 1 வாபதங்க
டீர்த்தருண் மகோத்தமபலன்
2 போதனரனுர்க்கருள் புரிந்தபரதேவ னெவன்
புகலிலுனை யல்லா தெவன்
பாதமல ராதரவின் பாய்ந்தி புனற்றன்றலை
யேந்து சிவனேந்து சிவமே 3 (13)

---

1 ஆபதம் - ஆபத்து. 2 போதன் - பிரமன்.
3 சிவம் - மங்களம், நன்மை.

(க - ரை). வேதமானது மதுகைடபர்களால் அபகரிக்கப்பட்ட காலத்திலும், (தனது பிதாவும் குருவுமான பிரமனுடைய தலையைக் கொய்ததாலுண்டான) குரூரமான குருபாதகம் (சிவனுக்கு) நேரிட்டகாலத்திலும், (திரிபுராசுரர் முதலிய) அசுரர்களாலுண்டான பீடையாதி யாபத்துகள் நேரிட்ட காலத்திலும், அவைகளி னின்றும் விடுவித்து, (தன்னை யாராதித்ததால் லோகத்தில் ஈசுவரன் என்று கொண்டாடும்படியான) பதவியை பிரம ருத்ராதியருக்கு கொடுத்து அவர்களுக்கு ரக்ஷகனானவன் நீயன்றி வேறியாருள்ளான்? எவனுடைய ஸ்ரீ பாத தீர்த்தத்தைத் தன் தலைமேற் கொண்டதினால் சிவன் மங்களகரத்தை யடைந்தான்?

𑌕𑌸𑍍𑌯𑍋𑌦𑌰𑍇 𑌹𑌰𑌵𑌿𑌰𑌿𑌞𑍍𑌚𑌿 𑌮𑍁𑌖 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌃
𑌕𑍋𑌰𑌕𑍍𑌷𑌤𑍀 𑌮𑌮 𑌜𑌨𑌿𑌷𑍍𑌟 𑌚 𑌕𑌸𑍍𑌯𑌨𑌾𑌭𑍇𑌃 ।
𑌕𑍍𑌰𑌾𑌂𑌤𑍍𑌵𑌾 𑌨𑌿𑌗𑍀𑌰𑍍𑌯 𑌪𑍁𑌨𑌰𑍁𑌦𑍍𑌗𑌿𑌰𑌤𑌿 𑌤𑍍𑌵𑌦𑌨𑍍𑌯𑌃
𑌕𑌃 𑌕𑍇𑌨𑌵𑍈𑌷 𑌪𑌰𑌵𑌾𑌨𑌿𑌤𑌿𑌶𑌕𑍍𑌯 𑌶𑌙𑍍𑌕𑌃 ॥ 14 ॥

யா [1]றிறையோ [2]னிறையுட்பட வண்ட
மடங்கலுந் தன்னுதரத்துடையான்
யாரி[3] தலைக்கணின்றுயின வாகும
வண்டமனைத்து மளித்தருள்வான்
யாரகிலத்தை யளந்து விழுங்கி
யுமிழ்ந்தவ னின்னினு மன்னியனே
யார் பரதந்திர முற்றுள தகிலமு
நின்னதலா திதிலையமுமே. (14)

(க - ரை). எவனுடைய திருவயிற்றிலே பிரமன் சிவனாதியரான சகலமு மடங்கிய இந்த பிரபஞ்ச மடங்கியிருந்

1 இறையோன் - சிவன். 2 இறை - பிரமன்.
3 இதலை - கொப்பூழ், உந்தி.

தது? இப்பிரபஞ்சமானது வேறெவனுடைய நாபியினின் றுண்டாயிற்று? இப்பிரபஞ்சத்தை நீயல்லாது வேறெவன் ரக்ஷிக்கின்றான்? உன்னை யல்லாமல் வேறெவன் இப்பிர பஞ்சத்தை (த்ரிவிக்ரமனாக) அளந்து, (பிரளயகாலத்தில்) விழுங்கி மறுபடியும் உமிழ்கின்றவன்? இப்பிரபஞ்சம் உன்னைத்தவிர வேறெவனுடைய ஸ்வாதீனத்தி லடங்கி யிருக்கிறது? இவைகளைக்குறித்து சந்தேகிக்கவுங் கூடுமோ?

𑌶𑍀𑌲𑌰𑍂𑌪𑌚𑌰𑌿𑌤𑍈𑌃 𑌪𑌰𑌮 𑌪𑍍𑌰𑌕𑍃𑌷𑍍𑌟
𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑍇𑌨 𑌸𑌾𑌤𑍍𑌵𑌿𑌕𑌤𑌯𑌾 𑌪𑍍𑌰𑌬𑌲𑍈𑌶𑍍𑌚 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍈𑌃।
𑌪𑍍𑌰𑌖𑍍𑌯𑌾𑌤 𑌦𑍈𑌵 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥 𑌵𑌿𑌦𑌾𑌂 𑌮𑌤𑍈𑌶𑍍𑌚
𑌨𑍈𑌵𑌾𑌸𑍁𑌰 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌯𑌃 𑌪𑍍𑌰𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌬𑍋𑌦𑍍𑌧𑍁𑌮𑍍॥15॥

உத்தமசீல குணத்தகையா லுரு
வாலதி மானுடசரிதை களாற்
சத்துவ சுத்த விபூதியினாலுயர்
சாத்து விகத்தினை யுரைமறையால்
தத்துவ மெய்ப்பொருடன்னை யுணர்த்திடு
சான்றவர் கொள்ளுமதங்களினா
லெத்திற னேனுமுளார் சிலதாமத
வியல்புடை யோருனை யறியவுமே. (15)

(க ரை). உன் உத்தமமான (சௌசீல்ய) குணத்தி னாலும், அப்ராகிருத திவ்ய மங்கள விக்ரகத்தினாலும், அதி மானுஷ சரித்திரங்களாலும், அத்யந்தம் சிரேஷ்டமான சுத்த சத்துவ யோகத்தினாலும், (ஸாத்விக கற்பத்திற் சொல் லுகிறபடியால் பிரபலங்களான) சாஸ்திரங்களினாலும், (பிர ஸித்தமான) தேவதா பாரமார்த்யத்தை யறிந்த (பராசரர் முதலியவருடைய) சித்தாந்தங்களினாலும், உன்னை அறிவ

தற்குக்கூட, அசுர ப்ரகிருதிகளான சிலருக்கு எவ்வளவேனும் சாத்தியப்படுகிறதில்லை.

𑌉𑌲𑍍𑌲𑌙𑍍𑌘𑌿𑌤 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧 𑌸𑍀𑌮 𑌸𑌮𑌾𑌤𑌿𑌶𑌾𑌯𑌿
𑌸𑌂𑌭𑌾𑌵𑌨𑌂 𑌤𑌵 𑌪𑌰𑌿𑌬𑍃𑌢𑌿𑌮 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌮𑍍 ।
𑌮𑌾𑌯𑌾𑌬𑌲𑍇𑌨 𑌭𑌵𑌤𑌾𑌪𑌿 𑌨𑌿𑌗𑍁𑌹𑍍𑌯𑌮𑌾𑌨𑌂
𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌕𑍇𑌚𑌿𑌦𑌨𑌿𑌶𑌂 𑌤𑍍𑌵𑌦𑌨𑌨𑍍𑌯𑌭𑌾𑌵𑌾𑌃 ॥ 16 ॥

வேதமூன் றளப்பு விஞ்சி யொப்புயர் விலாதுயர்
நாதமாயை யோடு நீயு னுயகம் மறைக்கினு
மோதவுன்னை யன்றியில்ல னென்னுமோர்தலார்சிலர்
வாதமின்றி யென்றுமுள்ளவாறு காணவல்லரே.(16)

(க - ரை). (காலத்தாலும் தேசத்தாலும் வஸ்துவினாலும் ஆகிய) மூன்றுவிதங்களினாலும் இவ்வளவென்று நிச்சயிக்க முடியாததும், ஒப்பு உயர்வு இல்லாம லுயர்ந்து இருக்கிற உன் பிரபுத்வத்தை (உன் ஆச்சரிய சக்தி யோகமாகிற) மாயைக்கொண்டு நீ மறைத்தபோதிலும், உன்னைத் தவிர வேறொரு சேஷியையு மறியாத மனநிலையையுடைய சில மகான்கள், எக்காலத்திலும் அந்தப் பிரபுத்வத்தை உள்ளபடி அறிகின்றார்கள்.

𑌯𑌦𑌣𑍍𑌡𑌮𑌣𑍍𑌡𑌾𑌨𑍍𑌤𑌰 𑌗𑍋𑌚𑌰𑌞𑍍𑌚 𑌯
𑌦𑍍𑌦𑌶𑍋𑌤𑍍𑌤𑌰𑌾𑌣𑍍𑌯𑌾𑌵𑌰𑌣𑌾𑌨𑌿 𑌯𑌾𑌨𑌿 𑌚 ।
𑌗𑍁𑌣𑌾𑌃 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌪𑌰𑌂 𑌪𑌦𑌂
𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌚 𑌤𑍇 𑌵𑌿𑌭𑍂𑌤𑌯𑌃 ॥ 17 ॥

ஆதியண்ட மவண்ட மடங்கிய
வகிலவத்துவு மையிரண்டளவுயர்
மீதுசூழுமே ழாவரணங்களும்
விரிகுணங்களும் வேற்றுமையற்றதும்

1 வேதகத்திய சேதனவர்க்கமும்
மேலதானவை குண்டமு நித்தருஞ்
சோதியாகு நின் சுந்தர ரூபமுஞ்
சொந்தமாமுன்வி பூதிகளாகுமே. (17)

(க - ரை). ஆதிகாலத் துண்டான அண்டங்களும், அவ்வண்டங்களி லடங்கிய அகில வஸ்துக்களும், மேன்மேலும் பதின்மடங்கதிகமான அண்டாவரணங்களும், ஸத்வ முதலிய குணங்களும், விகாரப்படாத பிரகிருதியும், சேதனர்களும், உயர்ந்த பரமபதமும், (பக்த முக்தர்களிலு மேலான) நித்ய சூரிகளும், சுத்த ஸத்வ தேஜஸ்ஸுடன் விளங்கும் உன் திவ்ய மங்கள விக்ரகமும் ஆகிய இவை யெல்லாம் உனக்கு சேஷ வஸ்துக்கள்.

வஶீ வதாந்யோ குணவாந் ருஜு: ஶுசி:
ம்ருது: தயாளு: மதுர: ஸ்திர: ஸம: ।
க்ருதீ க்ருதஜ்ஞஸ் த்வமஸி ஸ்வபாவத:
ஸமஸ்த கல்யாண குணாம்ருதோததி: ॥ 18 ॥

மன்னுமிரு வசமுகந்து வண்மை வீசி
வாய்மையுடன் தூய்மையினை வகித்தன் பர்க்கே
யின்னமுதா யெனை யோர்க்குஞ் சமனு யென்று
மிளகியநெஞ் சுடனனிகூர்ந் தவர்தம் வேட்கை
யுன்னிமுடித் தன்னவர்செய் நன்றிநாடி
யுகந்துதவி யருள்சீல குணவானு நீ
நின்னியல்வாங் கலியாண குணங்கட்கெல்லா
நிகரற்ற சுதையாழி யென நின்றாயே (18)

(க - ரை), எல்லாவற்றையும் தன் வசமாக்கி நடத்துவதோடு, ஆச்ரிதர்களுக்குத் தானே வசமாகி நடப்பவனும்,

1 வேதகம் - வேறு படுத்தல்.

(இனியவசனங்களோடு) தன் ஆச்ரிதருக்குத் தன் உடைமையையும் தன்னையுங் கொடுக்குந் தன்மையை யுடையவனும் ஆச்ரித ரக்ஷணத்தில் அவரது அபராதத்தால் மாறுபாடில்லாமல் ஒரே நிலையில் நின்று தான் வாக்களித்தபடி ரக்ஷிப்பவனும், நித்ய ஸம்ஸாரிகளை தன் ஸம்பந்தத்தினல் நித்ய சூரிகளோடு சேர்க்கவல்ல மகா பரிசுத்தனனவனும், அவர்கள் அனுபவிக்கத்தக்க போக்யனனவனும், தன் பெருமையைக் கருதாது தன்னை அடைபவரை சாதிபேதம் பாராட்டாமல் கூடி உறவாடி அவர்களுக்கு சமானமா யிருப்பவனும், அவரது பிரிவையும் அவர் படும் துன்பத்தையும் சகியாத இளகிய நெஞ்சை யுடையவனும், கைம்மாறு கருதாமல் அவர்களுக்கு உபகரிக்குமவனும், அவரது இச்சையை தன் திருவுள்ளத்தில் கொண்டு அதற்குத் தக்கபடி தானடந்து அவர் கார்யத்தைத் தானே முடிப்பவனும், அவர்களுக்குத் தான் செய்த பேருபகாரத்திற்காக அவர் செய்யும் அற்ப உபகாரத்தையும் பெரிதாக நினைப்பவனுமாகிய நீ, உனக்கு இயற்கையாகவே அமைந்துள்ள சகல கல்யாண குணங்களுக்கும் இணையில்லாததான ஒரு அமிர்த ஸாகரம்போல் (கரையில்லாமலும் பரம போக்யமாகவும்) ஆகின்ருய்.

𑌉𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌰𑍍𑌯𑌬𑍍𑌜𑌭𑍁𑌵𑍋𑌽𑌪𑌿 𑌪𑍂𑌰𑍁𑌷𑌾𑌨𑍍
𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑍍𑌯 𑌤𑍇 𑌯𑍇 𑌶𑌤𑌮𑌿𑌤𑍍𑌯𑌨𑍁𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍
𑌗𑌿𑌰𑌸𑍍𑌤𑍍𑌵𑌦𑍇𑌕𑍈𑌕𑌗𑍁𑌣𑌾𑌵𑌧𑍀𑌪𑍍𑌸𑌯𑌾
𑌸𑌦𑌾 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌨𑍋𑌦𑍍𑌯𑌮𑌤𑍋𑌽𑌤𑌿𑌶𑍇𑌰𑌤𑍇 ॥ 19 ॥

ஓதங்கிளர்த்திடுந் "தேயேசத" மெனுங் கிரமத்திற்
போதனின் மென்மேற்புருடர் விதித்துன் குணமொன்றி

னேதமிலெல்லை காணிய விச்சித்
தென்றுமுறை
வேதமு யற்சித் தசையினை யின்னும்
விட்டிலதே (19)

(க - ரை). வேதத்திற் கூறிய "தே யே சதம்" என்னும் ஒரு கிரமத்தை அனுசரித்து, உன் அனந்த குணங்களில் ஆனந்தகுணமாகிய ஒன்றினுடைய எல்லையைக் காணும் பொருட்டு, வேதங்கள், பிரமாவை மனுஷ்ய கோடிகளி லொன்ருய் நிறுத்தி அவனுக்கு மேன்மேல் பிர்மாவரையில் புருஷர்களைக் கற்பித்து, அதில் ஒவ்வொருவருடைய ஆனந்த குணமும் நூறு நூறு மடங்கு அதிகமெனக் கணக்கிட்டுக் சொல்லியும், கடைசியில் அந்த உன் ஆனந்தகுணத்தின் எல்லையைக் காணமாட்டாமல் இன்னும் காணும் பிரயத்தனத்தினின்றும் மீளவில்லை.

த்வதாஶ்ரிதாநாம் ஜகதுத்பவஸ்திதி
ப்ரணாஶ ஸம்ஸார விமோசநாதய: ।
பவந்தி லீலா விதயஶ்ச வைதிகா
த்வதீய கம்பீர மநோநுஸாரிண: ॥ 20 ॥

உனையடுப் போர்க்குண்டாக்க
லுலகெலா மளித்தொழித்தல்
வினையுறுஞ் சமுசாரத்தின்
விமோசன மடைத லென்னு
மனையவும் லீலையாகு
மன்னவர்தங் கம்பிர
மனதினை யனுசரிக்கு
மாமறை விதிகண்மாதோ.

(க - ரை.) இவ்வுலகங்களை யெல்லாம் உண்டாக்கல் ரக்ஷித்தல், அழித்தல் முதலான தொழில்களும், ஸம்ஸார விமோசனமடைதல் முதலிய மற்று சகலமும், உன் ஆச்ரிதர் விஷயத்தில் லீலைகளாகி அவர் நிமித்தமாகவே உண்டாயிருக்கின்றன. வேதங்களில் சொல்லப்பட்ட விதிகளும் உன்னை ஆச்ரயித்த அநந்ய ப்ரயோஜனருடைய கம்பீரமான மனதை அனுசரிக்கின்றன.

𑌨𑌮𑍋 𑌨𑌮𑍋 𑌵𑌾𑌙𑍍𑌮𑌨𑌸𑌾𑌤𑌿𑌭𑍂𑌮𑌯𑍇
𑌨𑌮𑍋 𑌨𑌮𑍋 𑌵𑌾𑌙𑍍𑌮𑌨𑌸𑍈𑌕𑌭𑍂𑌮𑌯𑍇 ।
𑌨𑌮𑍋 𑌨𑌮𑍋𑌽𑌨𑌨𑍍𑌤𑌮𑌹𑌾𑌵𑌿𑌭𑍂𑌤𑌯𑍇
𑌨𑌮𑍋 𑌨𑌮𑍋𑌽𑌨𑌨𑍍𑌤𑌦𑌯𑍈𑌕𑌸𑌿𑌨𑍍𑌧𑌵𑍇 ॥ 21 ॥

நெஞ்சுடன் வாக்கினை மீறியதாகுநி
　　னைப்பணிவேன் பணிவேன்
நெஞ்சுடன் வாக்கதினுக் கிடமாகுநி
　　னைப்பணிவேன் பணிவேன்
விஞ்சுமனந்த விபூதியனாகுநி
　　னைப்பணிவேன் பணிவேன்
விஞ்சுமகாதயை வேலையனாகுநி
　　னைப்பணிவேன் பணிவேன் (21)

(க-ரை) (ஞானத்தில் மிக்கோராயினும் தம்முடைய பிரயத்தனத்தால் அறிய நினைக்கின் அவரது) வாக்கினுக்கும் மனதிற்கும் எட்டாதவனான உன்னைப் பன்முறை நமஸ்கரிக்கிறேன். (உன் கிருபையால் நீ காட்டியருள, அந்த காரணத்தால் உன்னைக் காண்பவருடைய) வாக்கினுக்கும் மனதிற்கும் விஷயமான வுன்னைப் பன்முறை நமஸ் கரிக்கின்றேன் அநேகங்களான மகத்தான உபய விபூதிகளை யுடையவனான உன்னைப் பன்முறை நமஸ் கரிக்கின்றேன்:

(வாக்கினுக்கும் மனதிற்கும் விஷயமாகிய) பரமதயா சாகரமான உன்னைப் பன்முறை நமஸ்கரிக்கின்றேன்.

𑌨 𑌧𑌰𑍍𑌮𑌨𑌿𑌷𑍍𑌠𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌨 𑌚𑌾𑌤𑍍𑌮𑌵𑍇𑌦𑍀
𑌨 𑌭𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌂𑌸𑍍𑌤𑍍𑌵𑌚𑍍𑌚𑌰𑌣𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑍇 ।
𑌅𑌕𑌿𑌞𑍍𑌚𑌨𑍋𑌽𑌨𑌨𑍍𑌯𑌗𑌤𑌿𑌃 𑌶𑌰𑌣𑍍𑌯
𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑌮𑍂𑌲𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥ 22 ॥

நிலைபெறக் கருமநிட்டை
நின்றிலேன் ஞானமில்லேன்
மலரடி யிணையைப் பற்று
மன்பினை வகித்தேனல்லே
னிலைசர ணியனும் வேறு
சாதன மொன்றுமில்லேன்
தலைவநின் பாதமூலஞ்
சரணெனப் பற்றுவேனே. (22)

(க-ரை) (உன் திருவடிகளை யடைந்து நிலை பெறுவதற்கு அவசியமான) கர்மயோகத்தில் நிஷ்டையுடையேனல்லேன் ஞானயோகமு முடையேனல்லேன். உன் திருவடித் தாமரைகளில் பக்தியுடையவனுமல்லேன் இவைகளில்லையென்று அநுதாபமுண்டாவதற் கேற்ற ஆத்ம குணமுடையவனுமல்லேன் ஏ! ஸர்வசரணியனுன ஸ்வாமியே! (விரோதி நிவர்த்தி பூர்வமாக கைங்கர்யப் பிராப்திக்கு உபாயமாக) உன் திருவடிகளையே சரணுகப் பற்றுகின்றேன்,

𑌨 𑌨𑌿𑌨𑍍𑌦𑌿𑌤𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌤𑌦𑌸𑍍𑌤𑌿 𑌲𑍋𑌕𑍇
𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑍋 𑌯𑌨𑍍𑌨 𑌮𑌯𑌾 𑌵𑍍𑌯𑌧𑌾𑌯𑌿 ।
𑌸𑍋𑌽𑌹𑌂 𑌵𑌿𑌪𑌾𑌕𑌾𑌵𑌸𑌰𑍇 𑌮𑍁𑌕𑍁𑌨𑍍𑌦
𑌕𑍍𑌰𑌨𑍍𑌦𑌾𑌮𑌿 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑌤𑌿𑌸𑍍𑌤𑌵𑌾𑌗𑍍𑌰𑍇 ॥ 23 ॥

பலமுறை யானியற்றுப்
பாதக் கணங்கடம்மு
ளுலகினி லொன்றுமில்லை
யுறுபல னெனைவதைப்ப
நிலைகுலைந் தேங்கிவேறு
கதியிலேனாகி நின்முன்
கலியுடன் முகுந்த வின்றுக்
கதறியே கரைகின்றேனே. (23)

(க-ரை) பலதடவைகளில் என்னால் பண்ணப்படாத மகா பாதக கணங்களுள் ஒன்றேனும் இவ்வுலகின்கணில்லை! முகுந்த! அப்பாவங்கள் பக்வதசையை யடைந்து பலத்தை எனக்கு விளைவிக்க, இதை அனுபவித்துழன்று நிலைகுலைந் தேங்கிவேறே கதியொன்று மில்லேனாய் உன் முன்பு இப்பொழுது கதறிக் கரைகின்றேன்.

நிமஜ்ஜதோऽநந்த பவார்ணவாந்த
ஶ்சிராய மே கூலமிவாஸி லப்த: ।
த்வயாபி லப்தம் பகவந்நிதாநீ
மநுத்தமம் பாத்ரமிதம் தயாயா: ॥ 24 ॥

பவமெனும் பரவைதன்னுள்
பகவநீ டூழியாகக்
கவலையோடழுந்து மெற்கோர்
கரையென வகப்பட்டாய்காண்
உவமையிலுன் தயைக்கோ
ருத்தம வுரிமைபூண்ட
வவலமாரிதுவு முன்னா
லடைதலைப் பெற்றதின்றே. (24)

(க-ரை) அநேக ஊழிகளாக ஸம்ஸாரமென்னும் பெருங்கடலில் கவலையோடு கூடியமுழுந்தி வேறுபரிகாரமறியாத எனக்கு ஒரு கரைபோல நீ அகப்பட்டாய். இது இங்ஙனமிருக்க, ஏ! ஸ்வாமியே! உன்னுடைய இணை யில்லாத தயைக்கு உத்தமோத்தமமான ஒரு விஷயமாக இந்த அவல வஸ்துவும் உன்னலிப் பொழுது அடையப் பெற்றது.

അഭൂതപൂൎവം മമ ഭാവി കിം വാ
സൎവം സഹേ മേ സഹജം ഹി ദുഃഖം ।
കിന്തു ത്വദഗ്രേ ശരണാഗതാനാം
പരാഭവോ നാഥ ന തേഽനുരൂപഃ ॥ 25 ॥

இதுவரை யான்படாத விடரெனக்
கினியொன் றுண்டோ
வெதையுநான் சகிப்பன் துக்க
மியற்கையே யெனக்கானலுன்
பதமுறச் சரணடைந்தோர்
பரிபவப் படினுன் முன்ன
ரதுவுனக் கிணக்க மன்றே
நாதவெவ் விதத்து மந்தோ (25)

(க-ரை) இதுவரையும் நான் அனுபவியாத சங்கடங்களில் இனி நான் அனுபவிக்கும்படி நேரிடக்கூடிய சங்கடமொன்று உண்டோ? எதையும் நான் சகிப்பேன். (காமியான) எனக்கு (கர்மபலமான) துக்கங்கள் ஸஹஜமே. ஆனல் ஒன்றுண்டு. ஏ! ஸர்வேச்வரனே! உன் முன்பே உன் திருவடிகளில் சரணமடைந்தவர் பரிபவப் பட்டால் அப்பரிபவம் உனக்கு எவ்விதத்திலுந் தகுந்ததன்று.

നിരാസകസ്യാപി ന താവദുത്സഹേ
മഹേശ ഹാതും തവ പാദപങ്കജം ।

ருஷா நிரஸ்தோऽபி ஶிஶு: ஸ்தநந்தயோ
ந ஜாது மாது: சரணௌ ஜிஹாஸதி ॥ 26 ॥

என்னை நீ நூக்கினுலு
மீசனே கமலமன்ன
வுன்னடி யொருக்கணத்து
நீத்துநா னுய்யமாட்டே
னன்னையே முனிந்து நூக்கி
னவள்முலைப் பாலனென்றும்
மன்னியா யடியைப் பற்று
தனைவிட மனமுறுதே. (26)

(க-ரை) (ஆச்ரித ரக்ஷணத்தையே ஸ்வரூபமாக வுடைய) நீ என்னை கிருபை பண்ணுமல் தள்ளிவிட்ட போதிலும், உன் திருவடிகளை ஒரு க்ஷணமேனும் விட்டு விட்டு உஜ்ஜீவிக்க ஸமர்த்தனல்லேன். ஏ! ஸர்வேச்வரனே ஸ்தந்யமே தாரகமாக வுடைய ஒரு சிசுவானது கோபங் கொண்ட தன் மாதாவினுல் தள்ளப்பட்டாலும் (தன்னை யாதரித்த காலத்தில் போல்) அவளுடைய காலைக் கட்டிக் கொள்ளுமே யன்றி அதை விட்டுவிட விரும்பாதன்றே.

தவாம்ருதஸ்யந்திநி பாதபங்கஜே
நிவேஶிதாத்மா கதமந்யதிச்சதி ।
ஸ்திதேऽரவிந்தே மகரந்தநிர்பரே
மதுவ்ரதோ நேக்ஷுரகம் ஹி வீக்ஷதே ॥27॥

நின்னருடன்னு லமுதினைப் பொழியு
னம்புயத் தாள்களினிலையாய்
மன்னிய மனது முன்னையே யன்றி
மற்றதை நாட லெங்ஙனமாம்?

தன்னுயிர்க்கரிய மதுவினை நிரம்பத்
　　தாமரை கொண்டலர்ந் திருப்பப்
பின்னு முள்ளியினைப் பிரமரங் கண்ணால்
　　நோக்கவு நோக்கிடாதன்றே. (27)

(க-ரை) உனது தேனே மலர்ந்த திருவடித் தாமரைகளில் உன் நிர்ஹேதுக்ருபையாலே நிலையாகச் செலுத்தப்பட்ட மனஸ்ஸானது உன்னைத் தவிர வேறு விஷயத்தை எப்படி இச்சிக்கக்கூடும்? தேனை நிரம்பக்கொண்டு தாமரைப் புஷ்பமானது மலர்ந்திருப்ப, தேனையேயுண்டு ஜீவிக்கும் வண்டானது அதை விட்டுவிட்டு (நெருங்கிச் செல்வதற்கே சிரமமாயும், சிரமப்பட்டு நெருங்கினும் அற்பமான தேனை யுடையதுமான) முள்ளிப்பூவைக் கண்ணெடுத்தும் பாராதன்றே?

த்வதங்க்ரிமுத்திஶ்ய கதாபி கேநசித்
யதா ததா வாபி ஸக்ருத் க்ருதோஞ்ஜலி: ।
ததைவ முஷ்ணாத்யஶுபான்யஶேஷத:
ஶுபானி புஷ்ணாதி ந ஜாது ஹீயதே ॥ 28 ॥

ஒருமுறை யுனது திருவடியிணையை
　　யுன்னியே யெப்பொழுதேனு
மிருகரங்கூப்பி யெத்திறத்தவர்தா
　　மேனுமெவ் விதமாயேனும்
புரியுமஞ்சலியப் பொழுதினிற்றனே
　　யிடரெலா மாயமாய்ப் போக்கித்
தருமரு சுபங்கள் சகலமுமென்றுந்
　　தான் குறை வொன்று மில்லாதே. (28)

(க-ரை) (ஸர்வ சுலபமானதும், அதிபோக்யமானதுமான) உன் திருவடிகளை யுத்தேசித்து, எப்பொழுதாவது

(இச்சை பிறந்தபோது), (ஜாத்யாதி நியமமில்லாமல்) எவரேனும், (முறையாவது நியமமாவது பலாபேக்ஷையாவது யாதொன்று மில்லாமல்) எவ்விதமாயாவது, (எந்நாளும் செய்யவேண்டியதில்லாமல்) ஏதோ ஒரேதடவை இருகரம் கூப்பிச்செய்யும் அஞ்சலியானது அப்பொழுதே எல்லா பாவங்களையும் (ஒரு குவியலாகக்களவு போனது போல் சென்றவழி தெரியாவண்ணம்) மாயமாய்ப் போக்கி, இவ்வளவு செய்தும் என்றும் தனக்கு ஒரு குறைவு மில்லாமல், ப்ரபத்தி, ஞானம் முதலிய சகல ஸம்பத்துகளையும் விருத்தி பண்ணித்தரும்.

உதீர்ண ஸம்ஸார தவாசுசுக்ஷணிம்
க்ஷணேந நிர்வாப்ய பராஞ்ச நிர்வ்ருதிம் ।
ப்ரயச்சதி த்வச்சரணாருணாம்புஜ
த்வயாநுராகாம்ருத ஸிந்து சீகர: ॥ 29 ॥

செந்தழ லிட்டுச்சீறும் பவமெனுங் காட்டுத் தீயை
முந்தியோர் கணத்தவித்தே முடிவிலானந்த மீயும்
சந்தமாருனது செந்தாமரை யிணைத் தாளினன்பா
மந்தமா வமுதவாரித்திவலையி னென்றுதானே. (29)

(க-ரை) உன்னுடைய அழகான செந்தாமரைத் திருவடிகளின்மீது வைத்துள்ள (கைங்கர்யோப கரணமான) பக்தியாகிற அந்தக் அமுதக்கடலின் ஒரு திவலையானது, செந்தழலிட்டு மேலே கிளம்பிச் சீறி எரிகிற ஸம்ஸாரமாமாகிற காட்டுத் தீயை ஒரு க்ஷணத்தில் அவித்து அத்யுன்னதமான மோக்ஷானுபவா னந்தத்தையும் கொடுக்கின்றது.

விலாஸ விக்ராந்த பராவராலயம்
நமஸ்யதார்த்தி க்ஷபணே க்ருதக்ஷணம் ।

யதநம் மதீயம் தவ பாதபங்கஜம்
கதா நு ஸாக்ஷாத்கரவாணி சக்ஷுஷா ॥ 30 ॥

விண்ணவராதி மண்ணோ ருலகெலாமே யளந்து
நண்ணுந ரார்த்தியாவு நசித்தலே தொழிலாய்நின்றெ
னெண்ணரு தனமாமுன்ற னம்புயத்தாளை யிந்தக்
கண்ணினாற் கண்டுநானே களிக்குநா ளெந்தநாளோ.

(க-ரை) திரிவிக்ரமாவதாரத்தில் ஸர்வலோகங்களையு மளந்ததும், ஆச்ரிதர்களுடைய சிரமங்களைப் போக்குவதில் (தாமே மேல் விழுந்து) ஸமயம் பார்த்துக்கொண் டிருப்பதும், எனக்கு எண்ணுதற்கரிதான ஒரு நிதியாயுமுள்ள உன் திருவடித் தாமரைகளை, என் கண்களாலே கண்டு நான் களிக்கும் நாள் எந்த நாளோ? (எப்போது கண்டு களிக்கப் போகின்றேனோ?)

கதா புந: ஶங்கரதாங்ககல்பக
த்வஜாரவிந்தாங்குஶவஜ்ரலாஞ்சநம் ।
த்ரிவிக்ரம த்வச்சரணாம்புஜத்வயம்
மதீயமூர்தாநமலங்கரிஷ்யதி ॥ 31 ॥

சங்குசக் கரத்திேனாடு
சரோருகந்துவஜஞ் சார்ந்த
வங்குசம் வயிரங் கற்ப
தருமுதலாகுஞ் சின்னங்
தங்குநின் தாமரைத்தாள்
விக்ரம வென் சிரத்தைப்
பொங்குமென் மனங்களிப்பப்
புனையுநா ளெந்த நாளோ. (31)

(க-ரை) (எல்லாருடைய சிரஸ்ஸுக்களிலும் உன் திருவடியை அமர்த்தியருளிய) எ! திரிவிக்ரமனே! சங்கம், சக்கரம், பத்மம், த்வஜம், அங்குசம், வச்ரம், கற்பம், இவை முதலாகிய வற்றின் (உபய விபூதிஸாம் ராஜ்யத்தைக் குறிக்கின்ற) திவ்ய ரேகைகளையுடைய உன் திருவடிகள், என் மனம் பொங்கிக் களிக்குமாறு எப்பொழுது என் சிரஸ்ஸை அலங்கரிக்கப் போகின்றனவோ?

𑌵𑌿𑌰𑌾𑌜𑌮𑌾𑌨𑍋 𑌜𑍍𑌜𑍍𑌵𑌲 𑌪𑍀𑌤 𑌵𑌾𑌸 𑌸𑌂
𑌸𑍍𑌮𑌿𑌤𑌾 𑌤𑌸𑍀 𑌸𑍂𑌨 𑌸 𑌮𑌾𑌮𑌲 𑌚𑍍𑌛𑌵𑌿𑌂 ।
𑌨𑌿𑌮𑌗𑍍𑌨 𑌨𑌾𑌭𑌿𑌂 𑌤𑌨𑍁𑌮𑌧𑍍𑌯 𑌮𑍁𑌨𑍍𑌨𑌤𑌂
𑌵𑌿𑌶𑌾𑌲 𑌵𑌕𑍍𑌷𑌸𑍍𑌥𑌲 𑌶𑍋𑌭𑌿 𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥ 32 ॥

விந்தையுடன் திருவரைபது பூத்த
தெனச் சுடர்வீசு பொனம்பரமு
மந்தமுடன் னலர் காயாம்பூ நிற
வாசறு மேனியு முன்னதமுஞ்
சுந்தரவாழி சுழன்றதெனச் சுழ
ருழ்ந்திடு முந்தியுஞ் சிற்றிடையுஞ்
சந்தமுடன் தடமார்வம் விளங்குவ
தாமறுவொன்று தரிப்பவனாய். (32)

(க-ரை) திருவரையே பூத்ததென்று சொல்லும்படி, வெகு ஆச்சரியமாயும் அழகாயும் பிரகாசிக்கும் பீதாம்பரத்தையும், அலர்ந்த காயாம் பூவைப் போன்ற நிர்மலமான திருமேனியையும், அழகென்னுங் கடலில் சுழலுண்டாகிய தென்னும்படி அழுந்திச் சுழல்கொண்ட திருநாபி கமலத்தையும், சிற்றிடையையும், விசாலமார்பில் பொலிவுடன் விளங்குகின்ற ஸ்ரீவத்ஸம் என்னும் ஒரு மறுவையுந்தரித்து உன்னதமாகப் பிரகாசிப்பவனாய்.

𑌚𑌕𑌾𑌸𑌤𑌂 𑌜𑍍𑌯𑌾𑌕𑌿𑌣𑌕𑌰𑍍𑌕𑌶𑍈𑌃 𑌶𑍁𑌭𑍈𑌶𑍍
𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑌿𑌰𑌾𑌜𑌾𑌨𑍁𑌵𑌿𑌲𑌮𑍍𑌬𑌿𑌭𑌿𑌰𑍍𑌭𑍁𑌜𑍈𑌃 ।
𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌵𑌤𑌂𑌸𑍋𑌤𑍍𑌪𑌲𑌕𑌰𑍍𑌣𑌭𑍂𑌷𑌣
𑌶𑍍𑌲𑌥𑌾𑌲𑌕𑌾𑌬𑌨𑍍𑌧𑌵𑌿𑌮𑌰𑍍𑌦𑌶𑌂𑌸𑌿𑌭𑌿𑌃 ॥ 33 ॥

பத்தவி ரோதிகள் பட்டற வேந்து வி
ஞாணியின் சுவடு படிந்துளவா
யுத்தம புருடவி லக்ஷண முற்று மு
ழுந்தள வாய்ச் சுப சூசிகை யா
யத்திருவின் செவி யலர் மலருற்பல
மும் மிழையும் மவிழ் பின்னகமு
மொத்தி யுறுத்திய தென்ன வொளிர் தரு
மென்மை யினான்கு புயத்தவனாய் (33)

(க-ரை) ஆச்ரித விரோதிகளைக் களையும்பொருட்டு தரித்த சார்ங்கத்தின் நாணினாலுண்டான தழும்பு படிந்துள்ளனவாய், உத்தமபுருஷ லக்ஷணமாக முழங்கால் வரைக்கும் நீண்டனவாய், பக்தர்களுக்கு மங்களகரமானவையாய், அந்த ஸ்ரீ மகா லக்ஷிமியினுடைய திருச்செவி மலரான உற்பலமும் கர்ணாபரணங்களும் அவிழ்ந்திருக்கும் திருக்குழல் கற்றையும் ஆகிய இவைகள் உறுத்தினது தோற்றும்படி பிரகாசிக்கும் மிருதுவான நான்கு திருத்தோள்களை யுடையவனாய்.

𑌉𑌦𑌗𑍍𑌰𑌪𑍀𑌨𑌾𑌂𑌸𑌵𑌿𑌲𑌮𑍍𑌬𑌿𑌕𑍁𑌣𑍍𑌡𑌲
𑌅𑌲𑌕𑌾𑌵𑌲𑍀𑌬𑌨𑍍𑌧𑍁𑌰𑌕𑌮𑍍𑌬𑍁𑌕𑌨𑍍𑌧𑌰𑌮𑍍 ।
𑌮𑍁𑌖𑌶𑍍𑌰𑌿𑌯𑌾 𑌨𑍍𑌯𑌕𑍍𑌕𑍃𑌤𑌪𑍂𑌰𑍍𑌣𑌨𑌿𑌰𑍍𑌮𑌲
𑌅𑌮𑍃𑌤𑌾𑌂𑌶𑍁𑌬𑌿𑌮𑍍𑌬𑌾𑌮𑍍𑌬𑍁𑌰𑍁𑌹𑍋𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌶𑍍𑌰𑌿𑌯𑌮𑍍 ॥34॥

பருத்துயர் வான திருப்புய மட்டும்
படிந்திழி குண்டலமுங் குழலு
மிருத்தலி னேரெழி லேந்தி யிலங்கு
மிடம்புரி போலொளிர் கண்டமதுந்
தரித்தது மோரழகோ வென நின்மல
பூரண சந்திரனு ரொளியுந்
திருத்துவதாமலர் மரையெழிலும் மிகு
திருமுக மண்டல சோதியனாய் (34)

(க-ரை) பருத்து உயர்ந்த திருத்தோள்கள் மட்டும் தாழ்ந்து தொங்குகின்ற குண்டலங்களாலும் குழல்களாலும் பொலிந்து விளங்குகின்ற சங்கம் போன்ற அழகான திருக் கழுத்துடனும் தன் காந்தியினாலே கலைகளால் நிறைந்தும் நிர்மலமுமான பூரண சந்திரனுடைய ஒளியும் அப்போது மலர்ந்த தாமரைப் புஷ்பமும் படைத்துள்ள அழகும் ஒரு அழகோ வெனத் தோற்பிக்கும் பேரழகுவாய்ந்த திருமுக மண்டலத்துடனும் ஜ்வலித்துப் பிரகாசிக்கும் ஒரு ஜோதி யானவனாய்.

𑌪𑍍𑌰𑌬𑍁𑌦𑍍𑌧 𑌮𑍁𑌗𑍍𑌧𑌾𑌂𑌬𑍁𑌜 𑌚𑌾𑌰𑍁𑌲𑍋𑌚𑌨𑌂
𑌸𑌵𑌿𑌭𑍍𑌰𑌮 𑌭𑍍𑌰𑍂𑌲𑌤 𑌮𑍁𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌾𑌧𑌰𑌮𑍍 ।
𑌶𑍁𑌚𑌿 𑌸𑍍𑌮𑌿𑌤𑌂 𑌕𑍋𑌮𑌲 𑌗𑌣𑍍𑌡 𑌮𑍁𑌨𑍍𑌨𑌸𑌂
𑌲𑌲𑌾𑌟 𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤 𑌵𑌿𑌲𑌂𑌬𑌿𑌤𑌾𑌲𑌕𑌮𑍍 ॥ 35 ॥

சீரலர் செவ்விய தாமரை போன்ற
திருக்க ணிணைக ளமர்ந்தவனாய்
நேரியதா மடி யார்க்கரு டோன்ற
நெரித்துளவாம் புருவத்தனனு

யோதரத்துட னிலகு கபோலமு
மின்முறுவல் லுயர் நாசிகையுங்
காரினிருண்டு சுருண்டு நுதல் வரைக்
கவினுறவீ ழுள கத்தனனாய் (35)

(க-ரை) சிறப்புடன் மலர்ந்த செந்தாமரை மலர் போன்ற சுந்தரமான திருக்கண்களையுடையவனாய், ஆச்ரிதர்கள் விஷயத்தில் தன்னாதரவெல்லாம் தோற்றும்படி நெறித்திருக்கும் புருவத்தையுடையவனாய், அழகான திருவதரத்துடனும் தாவள்யமான திரு முறுவலுடனும், கோமளங்களான கபோலங்களுடனும், உயர்ந்த திரு நாசிகையுடனும், மேகம்போல் இருண்டு நெற்றிவரையில் தாழ்ந்து சுருண்டிருக்கும் திருக்குழல்களுடனும் விளங்குபவனாய்.

𑌸𑍍𑌫𑍁𑌰𑌤𑍍𑌕𑌿𑌰𑍀𑌟𑌾𑌙𑍍𑌗𑌦 𑌹𑌾𑌰 𑌕𑌣𑍍𑌠𑌿𑌕𑌾
𑌮𑌣𑍀𑌨𑍍𑌦𑍍𑌰 𑌕𑌾𑌞𑍍𑌚𑍀 𑌗𑍁𑌣 𑌨𑍂𑌪𑍁𑌰𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 ।
𑌰𑌥𑌾𑌙𑍍𑌗 𑌶𑌙𑍍𑌖𑌾𑌸𑌿 𑌗𑌦𑌾 𑌧𑌨𑍁𑌰𑍍𑌵𑌰𑍈𑌰𑍍
𑌲𑌸𑌤𑍍 𑌤𑍁𑌲𑌸𑍍𑌯𑌾 𑌵𑌨𑌮𑌾𑌲𑌯𑍋𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌮𑍍 ॥ 36 ॥

தேசமருந்திரு முடியினோர் மௌலியு
மங்கத வாரமுங் கண்டிகையுங்
காசிலொளிர்தரு கௌத்துவமும் மரை
நாணுட னூபுர முதலியவு
மாசுக மார்தனு வாழி வளைக்கதை
வாண் முத லாகிய வாயுதமும்
வாச நறுந்துள வத்தழகாம் வன
மாலையுடன் விரி தேசனுமாய் (36)

(க-ரை) ஜோதி மயமான திருமுடியை யலங்கரிக்கும் கிரீடம், தோள் வளைகள், முத்துத் திருக்கட்டுவடம், மாசுமறு வின்றிப் பிரகாசிக்கும் ரத்நச்ரேஷ்டமான கௌஸ்

துபம், அரைநூற்பட்டிகை, திருச் சிலம்புகள் முதலாகிய திவ்யாபரணங்களினுலும், திருவாழித் திருச்சங்கு, வாள், கதாயுதம், சார்ங்கம், முதலாகிய திவ்யாயுதங்களாலும், வாசனைவீசும் திருத்துழாயால் அழகுவாய்ந்த வனமாலையாலும் பிரகாசிப்பவனுமாய்.

சகர்த² யஸ்யா ப⁴வநம் பு⁴ஜாந்தரம்
தவ ப்ரியம் தா⁴ம யதீ³ய ஜந்மபூ⁴: ।
ஜக³த்ஸமஸ்தம் யத³பாங்க³ ஸம்ஶ்ரயம்
யத³ர்த²மம்போ⁴தி⁴ரமந்த்²யப³ந்தி⁴ ச ॥ 37 ॥

உன்னழகான வுரந்தனை யுன் பிரி
யைக் குறை மாளிகையா யுதவி
யன்னவ டோன்றிய வாழி யுனக்கினி
தமரு மிருப்பிடமா யருளி
மன்னுமி வுபயவி பூதியி னுற்பவ
மார்ந்திடு மந்த கடாக்ஷ முறும்
பொன்னை யடைகுபு புணரி கடைந்தணை
கட்டி யுகந்து பொலிந்தவனுய் (37)

(க - ரை). உன் அழகான திருமார்பை உன் பிரியையான பெரியபிராட்டியார் உறைவதற்குத் தக்க ஒரு மாளிகையாகக் கொடுத்து, அன்னுள் அவதரித்த க்ஷீராப்தியை உனக்கு இனிதாக அமரும் இருப்பிடமாகக் கொண்டு, இவ்வுபய விபூதியும் பற்றுக அடையும் கடைக்கண் பார்வையை (கடாக்ஷம்) யுடைய அந்த பிராட்டியாரைப் பெறுவதற்காக, கடலைக் கடைந்தும், பின் ஒருகால் திருவணைகட்டியு முகந்து திகழ்ந்தருளியவனுய்.

ஸ்வவைஶ்வரூப்யேண ஸதா³நுபூ⁴தயா
அப்யபூர்வவத்³ விஸ்மயமாத³தா⁴நயா ।

குணேந ரூபேண விலாஸ சேஷ்டிதை:
ஸதா தவைவோசிதயா தவ ச்ரியா ॥ 38 ॥

நின்னிட சேர்த்தி நிரந்தரமாய்ப் பல
 வடிவிலுஞ் செவ்வி நிலை பெறினு
மன்னவ ணிற் கொர பூருவமாகிய
 வாச்சரியத்தை விளைப்பவளாய்
தன்னிகரில் வடி வாலுந் தகைமையி
 னாலும் விலாச விதங்களிலு
முன்னொருவர்க்கே யுரியவளாகு மு
 னித்திய சம்பத்து றுபவனாய். (38)

(க-ரை) (ஸர்வ சக்தனான) உன்னுடைய எல்லா விக்ரகத்தாலும், ஸர்வ காலத்தும் உன்னாலனுபவிக்கப்பட்டிருந்தும், நித்யம் அபூர்வமான ஆச்சரியத்தை உனக்கு உண்டாக்குபவளாய், நிகரில்லாத தன் வடிவழகாலும், சீலாதி குணங்களினாலும், திருவிளையாட்டுகளினாலும், (பர, வ்யூக, விபவாதி எல்லா அவஸரங்களிலும்) உனக்கே யுரியவளாய் விளங்கும் அந்த மகா லக்ஷ்மியை உன் நித்ய ஸம்பத்தாய்க் கொண்டு இலங்குபவனாய்.

தயா ஸஹாஸீநம் அநந்த போகிநி
ப்ரக்ருஷ்ட விஜ்ஞாந பலைக தாமநி ।
பணாமணி வ்ராத மயூக மண்டல
ப்ரகாசமாநோதர திவ்ய தாமநி ॥ 39 ॥

உத்தம ஞான பலன்க டமக் கொ
 ருறைவிட மாக நிலைத்தவனுந்
துத்தியுடைப் பண மேந்து மிரத்தின
 மெங்குந் துலங்கு மோர் சோதியுடன்

மத்தியமா முதரத்தை யொரத்புத
　　மாளிகை யாக வகிப்பவனும்
பத்தனுமான வனந்தனணை மிசை
　　பத்தினியோ டுறை கின்றவனாய். (39)

(க-ரை) உத்தமமான ஞானசக்திகளுக்கு ஒரு இருப்பிடமாக நிலைபெற்றவனும், பொறிகளையுடைய படங்களை யேந்தும் தன் சிரோரத்நங்களின் காந்தியினால் பிரகாசிக்கின்ற தன் உதரத்தின் மத்யப்பிரதேசத்தை ஒரு திவ்யாந்தப் புரமாக வகிப்பவனும், பரமபக்தனுமான திருவனந்தாழ்வான் மடியிலே பத்தினியாகும் பெரிய பிராட்டியோடு வீற்றிருப்பவனாய்.

நிவாஸ ஶய்யாஸந பாதுகாம்ஶுகோ
பதாந வர்ஷாதப வாரணாதிபி: ।
ஶரீர பேதைஸ்தவ ஶேஷதாம் கதை
ர்யதோசிதம் ஶேஷ இதீரிதே ஜநை: ॥ 40 ॥

வாச முனக்கொரு மாளிகையும் முப
　　தானமும் பள்ளியு மஞ்சுகமு
மாசன மும் மணி பாதுகையும் மழை
　　யாதவருக் கர ணாதி பல
பேசரிதா முபசார விசித்திர
　　பேத சரீர விதங்களி னாற்
றேசுறுஞ் சான்றவ ராலுசிதப் படி
　　சேட னெனப் படுவோன் மிசையே. (40)

(க-ரை) நீ நிவாஸம் பண்ணுவதற்காக ஒரு திருமாளிகையாயும், சயனத்திற்காக படுக்கையும் தலையணையுமாகியும், சிம்மாசனமாகியும், மரவடியாகியும், மழை வெயில்

இத்யாதிகளைப் போக்க ஒரு குடையாகியும், இவை முதலான இன்னும் அநேக கைங்கர்ய பேதங்களுக்குத் தக்கபடி தன் சரீர பேதங்களினால் உன்னுடைய சேஷத்வத்தை அடைந்திருப்பதினால் உசிதப்படி நித்ய ஸூரிகளால் சேஷன் என்று சொல்லப்படும் அந்த திருவனந்தாழ்வான் மீது வீற்றிருப்பவனுமாய்.

தா³ஸ: ஸகா² வாஹநமாஸநம் த்⁴வஜோ
யஸ்தே விதாநம் வ்யஜநம் த்ரயீமய: ।
உபஸ்தி²தம் தேந புரோ க³ருத்மதா
த்வத³ங்க்⁴ரி ஸம்மர்த³ கிணாங்க ஶோபி⁴நா ॥ 41 ॥

நண்ணு நினக்கொரு தாசனா நண்பனும்
வாகனமும் மரி யாசன முந்
திண்ணமுறத் திகழுங் கொடியும் விரி
சாமரமும் மொர் விதானமு மா
யெண்ணின் மறை வடிவானவனா யடி
யிணைக ளிறுத்துந் தழும்பிலகி
யொண்ணு முனக் கெதிர் நின்று பணிந்திடு
முத்தம கலுழ னுகந்தவனாய் (41)

(க-ரை) உனக்கு தாஸனும் தோழனும் வாகனமும் ஸிங்காசனமும் கொடியும் மேற்கட்டியும் திருவாலவட்டமும் ஆகின்றவனும் உன்னுடைய திருவடிகள் நெருக்குவதாலுண்டாகிய தழும்பின் அடையாளத்தாலே சோபிக்கிறவனும் வேதஸ்வரூபியுமான பெரியதிருவடியாலே உன்முன்பு நிலைக்கண்ணாடி போல் நின்று கொண்டு ஸேவிக்கப் படுபவனாய்.

𑌤𑍍𑌵𑌦𑍀𑌯 𑌭𑍁𑌕𑍍𑌤𑍋𑌜𑍍𑌝𑌿𑌤 𑌶𑍇𑌷 𑌭𑍋𑌜𑌿𑌨𑌾
𑌤𑍍𑌵𑌯𑌾 𑌨𑌿𑌸𑍃𑌷𑍍𑌟𑌾𑌤𑍍𑌮 𑌭𑌰𑍇𑌣 𑌯𑌦𑍍𑌯𑌥𑌾 ।
𑌪𑍍𑌰𑌿𑌯𑍇𑌣 𑌸𑍇𑌨𑌾𑌪𑌤𑌿𑌨𑌾 𑌨𑍍𑌯𑌵𑍇𑌦𑌿 𑌤𑌤𑍍
𑌤𑌥𑌾𑌽𑌨𑍁𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌮𑍁𑌦𑌾𑌰 𑌵𑍀𑌕𑍍𑌷𑌣𑍈𑌃 ॥ 42 ॥

நித்தமு நீயமு துண்டபி னின்றதை
நிகரிலதாம் பிர சாத மெனு
பத்தி மகிழ்ந்ததை யுண்பவனும் நின
தாணையினுற் செக பார மெலாஞ்
சித்திர மாய்ச் சிர மேந்தி நடத்து நின்
நண்பனுமாஞ் சேனு பதியின்
வித்தக மாம் பணி விடைக ளுகந்தவன்
வேண்டிய வாறு பணிப்பவனுய் (42)

(க-ரை) பிரதி தினமும் நீ அமுதுசெய்த பிற்பாடு சேஷமாய் நின்றதை பரமோத்தமமான ப்ரஸாதமாக மதித்து மனமகிழ்ச்சியுடன் அதைப் புஜிப்பவனும், உன் நியமனப்படி ஜகத்தின் (உபய விபூதியின்) பாரத்தை யெல்லாம் தன் சிரஸ்ஸில் வகித்து விசித்ரமாய் நடத்துபவனும் உனக்கு இஷ்டனுமான ஸேநாபதி யாழ்வான் செய்யும் பணிவிடைகளை உகந்து அவன் செய்யும் விண்ணப்பத்திற்கனுகுணமாகவே அவனுக்குக் கட்டளைகளிடுபவனுய்.

𑌹𑌤𑌾𑌖𑌿𑌲𑌕𑍍𑌲𑍇𑌶𑌮𑌲𑍈𑌃 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌤𑌃
𑌤𑍍𑌵𑌦𑌾𑌨𑍁𑌕𑍂𑌲𑍍𑌯𑍈𑌕𑌰𑌸𑍈𑌸𑍍𑌤𑌵𑍋𑌚𑌿𑌤𑍈𑌃 ।
𑌗𑍃𑌹𑍀𑌤 𑌤𑌤𑍍𑌤𑌤𑍍𑌪𑌰𑌿𑌚𑌾𑌰 𑌸𑌾𑌧𑌨𑍈𑌃
𑌨𑌿𑌷𑍇𑌵𑍍𑌯𑌮𑌾𑌣𑌂 𑌸𑌚𑌿𑌵𑍈𑌰𑍍𑌯𑌥𑍋𑌚𑌿𑌤𑌮𑍍 ॥ 43 ॥

துன்ப மலங்க ளனைத்தையு நீத்து நின்
தூய மலர்த் திருவடி யிணையி
லின்ப மியற்கையி னூட்டுவ தாம் பணி
விடைகளிற் போக்கிய முற்றவரா
யன்புட னிற்குப சார மிழைத்திட
வாயின சாதன மேந்தினராய்ப்
பொன் புரை நித்தியர் நின்னை யதோசிதம்
போற்ற மகிழ்வுடன் பொலிபவனாய் (43)

(க-ரை) துன்பத்தைத் தரக்கூடிய (அவித்யை முதலான) குற்றங்களொன்று மில்லாதவராய், மகா பரிசுத்தமாகிய உன் திருவடிகளின் கைங்கர்யங்களையே இயற்கையாகவே எக்காலத்தும் போக்யமாக எண்ணுபவராய், பரமப்ரேமத்துடனே உனக்கு உபசாரம் செய்யும்பொருட்டு அந்தந்த கைங்கர்யோபகரணங்களான சத்ரசாமராதிகளைத் தரித்துக் கொண்டிருப்பவராயுள்ள அந்த நித்யஸூரிகள் உன்னை ஸ்வரூபானு ரூபமாக ஸேவிக்க, அதினால் மனமகிழ்ச்சி கொண்டு பிரகாசிப்பவனாய்.

𑌅𑌪𑍂𑌰𑍍𑌵 𑌨𑌾𑌨𑌾 𑌰𑌸 𑌭𑌾𑌵 𑌨𑌿𑌰𑍍𑌭𑌰
𑌪𑍍𑌰𑌬𑌦𑍍𑌧𑌯𑌾 𑌮𑍁𑌗𑍍𑌧 𑌵𑌿𑌦𑌗𑍍𑌧 𑌲𑍀𑌲𑌯𑌾 ।
𑌕𑍍𑌷𑌣𑌾𑌣𑍁 𑌵𑌤𑍍𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌤 𑌪𑌰𑌾𑌦𑌿 𑌕𑌾𑌲𑌯𑌾
𑌪𑍍𑌰𑌹𑌰𑍍𑌷𑌯𑌨𑍍𑌤𑌂 𑌮𑌹𑌿𑌷𑍀𑌂 𑌮𑌹𑌾𑌭𑍁𑌜𑌮𑍍 ॥ 44 ॥

பற்பல வாகு மபூருவ பாவ
ரஸங்கள் பணித்து நிறைப் பதினாற்
கற்பம னேகம டங்கிய காலம
துங்கண லேச மெனக் கழியப்

பொற்புடன் சாதுரியம் பல பூண்டு
விளங்கு விலாஸ வகை களினு
லற்புத மென்றுன தன்பினள் மெச்சி
யணைக்கு மகா புய முற்றவனுய் (44)

(க - ரை) இதற்குமுன் என்றும் கண்டறியாதனை போன்று வெகுவிதங்களாய் ச்ருங்காரோத்ஸாஹாதி ரஸங்களால் அதிகமாய் விருத்தியடைந்திருப்பதால் (பரம்பரார்த்தம் என்னும்) கற்பங்களடங்கிய காலமானது ஒருக்ஷணம் போலே கழிந்து கொண்டிருக்க, வெகு சாதுர்யம்பூண்டு அழகா யமைந்துள்ள லீலைகளினுல், பெரிய பிராட்டியார் அற்புதம் என்று மெச்சி அணைத்துக்கொள்ளும் பெரிய திருத்தோள்களை யுடையவனுமாய்.

அசிந்த்ய திவ்யாத்புத நித்ய யௌவந
ஸ்வபாவ லாவண்ய மயாம்ருதோததிம்
ச்ரிய: ச்ரியம் பக்தஜநைக ஜீவிதம்
ஸமர்த்த மாபத்ஸக மர்த்தி கல்பகம் ॥ 45 ॥

நெஞ்சி னினைக்கரி தாகிய வற்புத
நித்திய யௌவன நீர்மையனுய்
விஞ்சு மெழில் மய மாயமுதக்கட
லாய் விமலைக்கு மொர் சுபகரனுய்
தஞ்ச மடைபவ ருக்கொரு தாரக
போஷக போக்கிய சதுரனுமாய்
நஞ்சின் விபத்திலு நண்பனுமாய் வர
நாடுபவர்க் கொரு கற்பக மாய் (45)

(க - ரை) மனத்தால் எண்ணுதற்கரிதாகி வெகு ஆச்சர்யத்தை உண்டுபண்ணுவதான நித்ய யௌவனத்தை

இயற்கையாக உடையவனாய், லாவண்யம் நிறைந்து அமுதக் கடல் போன்றவனாய், ஸ்ரீமகாலக்ஷ்மிக்கும் மங்களகரனாய், தன்னை அடையும் ஆச்ரிதருக்கு தாரக போஷக போக்ய னாய், தன் ஆச்ரிதர் அனுபவிக்கும் பொருட்டு தன்னையே கொடுக்க ஸாமர்த்தியமுடையவனாய், எந்த ஆபத்தினின் றும் நீக்குவதில் ஒரு தோழன் போன்றவனாய், யாசிப்பவர்க் குக் கொடுக்கும் விஷயத்தில் ஒரு கற்பக விருட்சம்போன்ற வனாய்.

𑌭𑌵𑌨𑍍𑌤 𑌮𑍇𑌵𑌾𑌨𑍁 𑌚𑌰𑌨𑍍𑌨𑌿𑌰𑌨𑍍𑌤𑌰𑌂
𑌪𑍍𑌰𑌶𑌾𑌨𑍍𑌤 𑌨𑌿𑌃𑌶𑍇𑌷 𑌮𑌨𑍋𑌰𑌥𑌾𑌨𑍍𑌤𑌰𑌃 ।
𑌕𑌦𑌾𑌹 𑌮𑍈𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌕 𑌨𑌿𑌤𑍍𑌯 𑌕𑌿𑌙𑍍𑌕𑌰𑌃
𑌪𑍍𑌰𑌹𑌰𑍍𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌸𑌨𑌾𑌥 𑌜𑍀𑌵𑌿𑌤𑌃 ॥ 46 ॥

நின்று நிறை நினையே யனுவர்த்தன
மென்று மியற்றி நினை யொழி மற்
றென்றிலு மிச்சையி லேசமு மொன்றவி
டாம லொழித்தொரு நியதமுட
னென்று முனித்திய கைங்கரியங்களை
யேந்து மொர்ஸத்துடை வாழ்க்கையனாய்
நன்றென நிற்கு மகிழ்ச்சி விளைப்பதை
நானும் வகித்தலெஞ் ஞான்று கொலோ.

(க - ரை) இத்யாதி ஸ்வரூப ரூபகுண விபவங்களால் நிறைந்த உன்னையே இடைவிடாது என்றும் அனுவர்த்தித் துக்கொண்டு, உன்னைத்தவிர மற்ற விஷயங்களில் மனோ வ்யாபாரங்களை முற்றவும் தவிர்த்தவனாய், இந்த ஆத்மஸ்வ பாவமுள்ள காலமத்தனையும் திடமான மனதுடன் உனக்கு நித்ய கைங்கர்யங்களையே செய்துக்கொண்டு ஸபலமான ஸத்தையுடைய வாழ்க்கையுள்ளவனாய் உன்னை நான் உகப் பிக்கும் நாள் எப்பொழுது வருமோ.

திகஶுசிமவிநீதம் நிர்தயம் மாமலஜ்ஜம், பரம
புருஷ யோऽஹம் யோகிவர்யாக்ரகண்யை: ।
விதிஶிவ ஸநகாத்யைர் த்யாதுமத்யந்த தூரம்,
தவ பரிஜநபாவம் காமயே காமவ்ருத்த: ॥ 47 ॥

பத்துடை யோகிகளுக் குண் முதன்மைப்
படுமயனரன் சநகாதிக் ளாலு
மெத்துணை யெண்ணுதலுக்கு மிகக்கும்
வெகுதுலை யுறுநின பணிவிடை தன்னை
நத்துவன் காம விருத்தியனேனு
னசையுறு மசுசியன் விநயமிலாதே
னுத்தம புருடவிலச்சை யொடச்ச
மொழித்த வெனக்குறு மிழிவசையாமே.

(க-ரை) எ! புருஷோத்தம! பரமயோகிகளுக்குள் முதன்மைப்பட்ட பிரமன் சிவன் ஸநகாதியர் முதலானவர்களாலும் நினைப்பதற்கு மெட்டாத வெகு தூரத்திலுள்ள உன்னுடைய கைங்கர்யங்களை, சரீர சம்பந்தத்தால் அபரிசுத்தனும், ஆசார்யமுகமாக சிக்ஷிக்கப்படாதவனும், காமவ்ருத்தியை யுடையவனுமான நான் அபேக்ஷிக்கத் துணிந்தேன். இப்படி, பயத்தை யொழித்து வெட்கத்தைவிட்டுத் துணிந்த எனக்கு நிந்தையே தகும்.

அபராத ஸஹஸ்ர பாஜநம்
பதிதம் பீம பவார்ணவோதரே ।
அகதிம் ஶரணாகதம் ஹரே
க்ருபயா கேவலமாத்மஸாத்குரு ॥ 48 ॥

எண்ணிலா வபராதங்கட்
　　கிருப்பிடமாகி நானே
பண்ணிய வினையின் கோரப்
　　பவக்கடனடுவில் வீழ்ந்தே
திண்ணமுற் றகதியேனாய்ச்
　　சேவடி யடைந்த வென்னை
கண்ண நின் கருணை யொன்றே
　　கொண்டு கந்தருளு வாயே (48)

(க - ரை) எண்ணுக்குவராத ஆயிரக்கணக்கான அபராதங்களுக்கு இருப்பிடமாகி, நான் பண்ணிய பாவத்தின் பலனாக விளைந்த கோரமான ஸம்ஸார ஸாகரத்தினடுவில் விழுந்து தடுமாறி, உன்னைத்தவிர வேறுகதி யில்லேனாய் உன்னை உறுதியுடன் சரணமடைந்த என்னை அருணிறைந்த திருக்கண்களையுடைய நீ கடாக்ஷித்து, உன் நிர்ஹேது கிருபையாலே உன்னுடையவனென்று அங்கீகரித்தருளவேணும்

𑌅𑌵𑌿𑌵𑍇𑌕 𑌘𑌨𑌾𑌨𑍍𑌧 𑌦𑌿𑌙𑍍𑌮𑍁𑌖𑍇
𑌬𑌹𑍁𑌧𑌾 𑌸𑌨𑍍𑌤𑌤 𑌦𑍁𑌃𑌖 𑌵𑌰𑍍𑌷𑌿𑌣𑌿
𑌭𑌗𑌵𑌨𑍍 𑌭𑌵𑌦𑍁𑌰𑍍𑌦𑌿𑌨𑍇 𑌪𑌥𑌃
𑌸𑍍𑌖𑌲𑌿𑌤𑌂 𑌮𑌾𑌮𑌵 𑌲𑍋𑌕𑌯𑌾𑌚𑍍𑌯𑍁𑌤 ॥ 49 ॥

அடாரவிவேக மேகப் படலமெத்திசையு மூடி-
யிடைவிடாதிடும்பைமாரி பலவிதஞ் சொரியுமிந்தப்
படுபவ [1] துர்த்திநத்திற் பதமொழிந் தேங்கிநிற்குங்
கடையனைக் கடைக்கணிப் பாயச்சுத பகவானேயோ.

(க - ரை) அவிவேகமாகிற மேகங்கள் எல்லாத்திக்குகளையு மூடிக்கொண்டு, பலவிதமாக இடைவிடாமல் துக்கங்

---

1 துர்திநம் - கொடியதினம் சூர்யதர்சன மில்லாத தினம்.

களை வருஷிக்கிற இந்த ஸம்ஸாரமாகிய துர்திநத்தில் சரியான வழியினின்றும் நழுவி ஏக்கங்கொண்டு நிற்கும் கடையனான என்னை, ஏ! பகவானே! (ஆச்ரிதரை நழுவ விடாத காரணத்தால்) அச்யுதன் என்னுந் திருநாமத்தை வகித்தவனே! கடாக்ஷித்தருளவேணும்.

ந ம்ருஷா பரமார்த்தமேவ மே
ஶ்ருணு விஜ்ஞாபநமேகமக்ரத꞉ ।
யதி மே ந தயிஷ்யஸே ததோ
தயநீயஸ்தவ நாத துர்லப꞉ ॥ 50 ॥

வஞ்சனை யன்று நாத
வாய்மையே யான் வழங்குஞ்
செஞ்சொலி னிவ்விண்ணப்பஞ்
செவியினீ முன்ன மேற்பாய்
தஞ்சமாயடைந்த வென்னைத்
தயையுறு தொழிக் கிலங்தோ
விஞ்சு முன் தயைக்குத் தக்க
விடய மற்றரிய தாமே. (50)

(க-ரை) ஏ! ஸர்வ சேஷியே! நான் செய்யும் இந்த விண்ணப்பம் பொய் யன்று; உண்மையே; இதை முன்னம் நீ செவி சாய்த்தருளவேணும். தஞ்சமாக அடைந்த என்னை நீ தயை பண்ணுதொழிவாயாயின், உனக்கு தயைபண்ணி ரக்ஷிக்கத்தக்க வஸ்து கிடைப்பது துர்லபம்.

தத꞉ த்வமஸ்ய ப்ரபவே ந நாதவாந்
மதந்யதே த்வம் தயநீயவாந் ந ச ।
விதிநிர்மிதமேததந்வயம்
பகவந் பாலய மா ஸ்ம ஜீஹப꞉ ॥ 51 ॥

எனக்கு மோர் நாதனில்லை
நின்னைவிட் டென்னையன்றி
யுனக்கியல் பாந்தயைக்கு
முரிமையோரெ வருமில்லை
தனித்த நின் தயையினாலெம்
மிருவரி னிவ்விணக்க
மனத்தினிற் கொண்டருள் வாய்
மாதவ கைவிடாமே. (51)

(க-ரை) எனக்கும் உன்னைவிட வேறொரு நாதனுமில்லை; இயல்பாக அமைந்திருக்கும் உன்னுடைய தயைக்கும் என்னைவிட உரிமை பூண்டவர் வேறொருவருமில்லை. ஆகையால், ஏ! மாதவ! உன் கிருபையினா லேற்பட்டிருக்கும் இந்த ஸம்பந்தத்தை திருவுளங்கொண்டு அடியேனைக் கைவிடாது ரக்ஷித்தருளவேணும்.

𑌵𑌪𑍁𑌰𑌾𑌦𑌿𑌷𑍁 𑌯𑍋𑌽𑌪𑌿 𑌕𑍋𑌽𑌪𑌿 𑌵𑌾
𑌗𑍁𑌣𑌤𑍋𑌽𑌸𑌾𑌨𑌿 𑌯𑌥𑌾 𑌤𑌥𑌾𑌵𑌿𑌧𑌃 ।
𑌤𑌦𑌯𑌂 𑌤𑌵 𑌪𑌾𑌦𑌪𑌦𑍍𑌮𑌯𑍋
𑌅𑌹𑌮𑌦𑍍𑌯𑍈𑌵 𑌮𑌯𑌾 𑌸𑌮𑌰𑍍𑌪𑌿𑌤𑌃 ॥ 52 ॥

உடன்முத லாயவற்று
ளூற்றதியாவ னேனும்
படிகளின் பலவிதத்தி
லெவ்வகைப் பட்டேனேனுந்
திடமுற நினதே யென்னுந்
திண்ணமார் தெரிவா லுன்ற
னடியினிற் சமர்ப்பித் தேனிவ்
வென்னையே யிக்கணத்தே. (52)

(க-ரை) தேஹேந்திரியாதிகளுக்குள் எந்த ஸ்வரூபத்தை யுடையேனாயினும், (அணுத்வ விபுத்வாதி) குணங்களினால் எவ்வகைப்பட்டேனேனும் ஆகக்கடவேன் (இவைகளைப்பற்றிய ஞானம் இவ்விஷயத்தில் அநாவச்யம்) உன்னுடைய ஸொத்து என்றுமட்டில் நிச்சயமாய் என்னாலறியப் பட்ட இந்த 'நான்' என்னும் வஸ்து உன் திருவடிகளில் இக்கணத்திலேயே என்னால் ஸமர்ப்பிக்கப்பட்டது.

𑌮𑌮 𑌨𑌾𑌥 𑌯𑌦𑌸𑍍𑌤𑌿 𑌯𑍋𑌽𑌸𑍍𑌮𑍍𑌯𑌹𑌂
𑌸𑌕𑌲𑌂 𑌤𑌦𑍍𑌧𑌿 𑌤𑌵𑍈𑌵 𑌮𑌾𑌧𑌵 ।
𑌨𑌿𑌯𑌤𑌸𑍍𑌵𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑌬𑍁𑌦𑍍𑌧𑌧𑍀
𑌰𑌥𑌵𑌾 𑌕𑌿𑌂𑌨𑍁 𑌸𑌮𑌰𑍍𑌪𑌯𑌾𑌮𑌿 𑌤𑍇 ॥ 53 ॥

எனதுநா னென்ப வெல்லா
மாதவ யேற்று நிற்கு
முனதலான் மற்றெவர்க்கு
முண்மையிலுரிய தாமோ
தனிமுதலாகு நீயே
சருவசேடியெனத் தேர்ந்தே
யினியுன தடிக் கெதை நா
னின்புடன் சமர்ப்பிப் பேனே. (53)

(க-ரை) ஏ! ஸ்ரீயப்பதியே! என்னுடையதான ஸகலமும் அவைகளுக்குத் தங்குமிடமான நானும் ஆகிய எல்லாம் உண்மையில், ஸர்வசேஷியான உனக்கே சொந்தமல்லால் மற்றெவருக்காயினுமாமோ? இப்படி ஸகலமும் உன்னுடையதேயெனத் தெளிந்த உணர்ச்சியையுடைய நான் (முன்செய்த ஆத்ம ஸமர்ப்பணம் அபராதத்தோடொக்குமாயின்) உன் திருவடிகளுக்கு வேறெதை ஸமர்ப்பிக்கப் போகின்றேன்?

அவபோ³தி⁴தவாநிமாம் யதா²
மயி நித்யாம் ப⁴வதீ³யதாம் ஸ்வயம் ।
க்ருபயைதத³நந்ய போ⁴க்³யதாம்
ப⁴க³வந் ப⁴க்திமபி ப்ரயச்ச² மே ॥ 54 ॥

என்னிட மெக்காலத்து
மிசைந்து நின் விஷயமாக
மன்னிய வுரிமை நாத
வகையுடனறி வித்தாப் போல்
நின்னிட மன்றி மற்றோர்
நிலையினைப் பற்றாதாகும்
பன்னரும் பக்தி யெற்குப்
பணித்திடாயன் புகூர்ந்தே. (54)

(க - ரை) ஏ! நாத! எக்காலத்தும் என்பக்கலில் இசைந்துநிற்கும் உன் விஷயமான அநந்யார்ஹ சேஷத்வத்தை வகையுடன் தெரிவித்திருக்கும் வண்ணமே, உன்னைவிட்டு வேறொன்றிலும் போக்யதையைப் பெறாது உன்னிடத்தே யுண்டாகும் பரம பத்தியை கேவலம் உன்னுடைய கிருபையாலே எனக்கு உண்டு பண்ணவேணும்.

தவ தா³ஸ்ய ஸுகை²க ஸங்கி³நாம்
ப⁴வநேஷ்வஸ்த்வபி கீட ஜந்ம மே ।
இதராவஸதே²ஷு மா ஸ்ம பூ⁴த்
அபி மே ஜந்ம சதுர்முகா²த்மநா ॥ 55 ॥

உனது கைங்கரிய வின்ப
மொன்றையே நாடுவோர் சீர்
மனையினிற் கிருமிச் சென்மம்
வாய்க்கினு மகிழ் வனே

நினதொழி மற்றோர் மார்க்க
நேடுவார் தம்மிடத்தி
லினிமையா ரெண்கணூர் தஞ்
சென்மமு மிச்சியேனே. (55)

(க - ரை) உன்கைங்கரியம் ஒன்றிலேயே விருப்பங் கொள்ளும் பாகவதர்களுடைய திருமாளிகையில் எனக்கு ஒருகிருமி (புழு)ஜென்ம முண்டாயினும் அதை நான்மகிழ்ந் தடைவேன். அப்படியன்றி, உன்கைங்கர்யங்களை விட்டு மற்றெந்த மார்க்கத்தை யேனு மிச்சிப் போருடைய குடி யிருப்பில் பிர்மாவினுடைய சென்மம் கிடைத்த போதிலும் அதில் எனக்கு அபேக்ஷயில்லை.

𑌸𑌕𑍃𑌤𑍍𑌤𑍍𑌵𑌦𑌾𑌕𑌾𑌰 𑌵𑌿𑌲𑍋𑌕𑌨𑌾𑌶𑌯𑌾
𑌤𑍃𑌣𑍀𑌕𑍃𑌤𑌾𑌨𑍁𑌤𑍍𑌤𑌮 𑌭𑍁𑌕𑍍𑌤𑌿 𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌭𑌿𑌃 ।
𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌭𑌿𑌰𑍍𑌮𑌾𑌮𑌵𑌲𑍋𑌕𑍍𑌯𑌤𑌾𑌂 𑌨𑌯
𑌕𑍍𑌷𑌣𑍇𑌽𑌪𑌿 𑌤𑍇 𑌯𑌦𑍍𑌵𑌿𑌰𑌹𑍋𑌽𑌤𑌿 𑌦𑍁𑌃𑌸𑌹𑌃 ॥56॥

ஒருமுறையுன் வடிவழகி னோக்கிலுறு
மாசையினு லுயர்ந்து சேர்த்த
வரியசுக போகமுடன் முத்தியையு
மபதார்த்த மென நினைப்போர்
பிரிவதினு லொருநொடியு மாற்றாமை
யுனக்கூட்டும் பேற்றை யுற்றோர்
பரமவர பாகவதர் பார்வைக்குப்
பாத்திரனு வெனைப் பணிப்பாய். (56)

(க - ரை) உன்திவ்ய மங்கள விக்ரகத்தை ஒருமுறை ஸேவிக்க ஆசைகொண்டு அதினுல் அருமையான பிரமாதி போகத்தையும் அதற்கும் மேலான மோக்ஷத்தை யுங்கூட

ஒரு அபதார்த்தமாக நினைக்கின்றவர்களும், தாம் ஒருக்ஷணம் பிரிந்தாலும் அப்பிரிவினுல் பொறுக்க முடியாத சங்கடத்தை உனக்கே உண்டு பண்ணுபவருமான அந்தபரம பாகவதர்களின் கடாக்ஷத்துக்குத் தக்கவனுக அடியேனைச் செய்தருள வேணும்.

ந தேஹம் ந ப்ராணாந் ந ச ஸுகமசேஷா
பிலஷிதம், ந சாத்மாநம் நாந்யத் கிமபி தவ சேஷத்வ
விபவாத் । பஹிர்பூதம் நாத க்ஷணமபி ஸஹே
யாது சததா, விநாசம் தத்ஸத்யம் மதுமதந
விஜ்ஞாபநமிதம் ॥ 57 ॥

உன்னுரிமை யாம் பெருமை யிற்கு வெளியுள்ளவுடல்
வேண்டில னுயிர் வேண்டிலேன்
பின்னுமெவரும் பெறவிரும் புஞ்சுகமான் மமுத
லான பிறவும் வேண்டிலேன்
என்னுடைய நாத மதுசூதன சகிக்ககில
னிந்நொடி யிலிவை கட்கெலா
மன்னிய விநாசம் பல வகையிலுற வேண்டுவனி
வசனமது வாய்மையதுவே. (57)

(க - ரை.) ஏ! ஸ்வாமியே! உன்னுடைய சேஷத்வமாகிற பெருமைக்கு வெளிப்பட்டுள்ள சரீரத்தையும் உயிரையும், எல்லாரு மடைதற்கு ஆசைப்படக் கூடிய சுகத்தையும் ஆத்மாவையும் இன்னும் இவைபோன்ற மற்றெதையும் நான் வேண்டிலன் ஏ! மதுசூதன! இவைகளொன்றையும் நான் சகிக்கவல்லே னல்லேன். இவ்வஸ்துக்கள் யாவும் பலவிதங்களால் இந்த க்ஷணத்தில் நாசமடையட்டும்; இப்படி சொல்லும் இந்த விண்ணப்பம் ஸத்யமானதே.

உராஜகஸ்யா நாஶேந வசிஹாரணீயஸ்ய ஶேஷ
தொ, நிஹீ நாவானோऽஹம் நரவஶா ரஶாஹ
ஸ்யாஷஹ ஶேஷி । உயாஷிதோ யதோ நிரவயிகூ
வாத்ஸல்ய ஜலதெ, தவஷாரம் ஷாரம் குணகண
தித்ஷாதி குதஷீ: ॥ 58 ॥

ஆதியறத் துன்பமுறு மகத்தாய் நின்று
னருளதினு லேயன்றி யகற்ற வொண்ணு
வேதமுறும் பாவத்திற் கிடமாய் நின்ரூ
ரீன நடையுற்று நரப் பசுபோன் றேனும்
மாதவ தயோததியே பந்துவே யோர்
வரம்பில்லா வாற்சலியக் கடலே நின்றன்
கோதிலவாங் குணகணங்க ளெண்ணி யெண்ணிக்
கூசாதிங் ஙனமிச்சை கொள்ளுவேனே. (58)

(க - ரை.) அநாதியாய் துன்பங்களை விளைவித்துக் கொண்டு நாளுக்கு நாள் விர்த்தியடைந்து பருத்து நின்று, உன்கிருபை யொன்றினுலன்றி மற்றெதினுலும் பரிஹரிக்க முடியாதன் வாயுள்ள பாவங்களுக்கு இருப்பிடமாகி, துராசாரமுடையவனுய், நரசென்ம மெடுத்தும் ஞானமில்லாத ஒரு பசுவைப்போல் இருந்தேனுயினும், ஏ! மாதவ! ஏ! தயாசாகரமே! ஏ! பந்துவே! கரையில்லாத வாற்சல்யக் கடலே! உன்னுடைய அனந்த திருக்கல்யாண குணங்களை நினைத்து நினைத்து அஞ்சாமல் இவ்வண்ணம் (பரமபுருஷார்த்தத்தில்) இச்சை கொள்கின்றேன்.

௫௯. நிஷ்ஷுணவ்யவம் யதி வாநரிதீஷு ஷிவாஜ
ஸஷேஷு ஷஷஸ்தி வவந ஹ்ஜீ ஶாவயமி ।

ததாபி த்யும் ரக்ஷிதம் வசந மயம் ப்யாபி க்ருபயா
த்வமேவைவம் ஹிதம் தரணீதர ஶிக்ஷயைநம் ॥59॥

இவ்வகையே பேற்றுக்குத் தக்க விச்சை
யிலனேனு முள்ளவன்போ னடித்து நின்றன்
மெய்யறியாத் தமவிரசோ குணங்கள் மேலாய்
மிறையுற்ற கபடமனதுடையே னாகிப்
பொய்வசனங் கொண்டுதுதி புரிந்தே னேனும்
பூவளித்தோ யிதையேநீ பொருட்டாய்க் கொ
ளுய்யும்வகை யுணர்ந்திடுமா றென்னுளத்தை [ண்டெ
யுன்னருளாற் சிட்சித்துத் திருத்துவாயே. (59)

(க - ரை.) இம்மாதிரி பேற்றுக்குத் தகுந்த இச்சையை உடையே னல்லேனேனும் உடையவன் போல் நடித்து, ராஜஸ தாமஸ குணங்களால் மூடப்பட்டநான் என்கபட மனத்துடன் பொய் வசனங்களைக் கொண்டு உன் ஸ்தோத்ரம் புரிந்தேனேனும் ஏ! பூமியை நிர்த்தாரணம் பண்ணினவனே! இதையே ஒரு பற்றாகக்கொண்டு என்கபட மனத்தை உன் கிருபையாலே நீயேசிக்ஷித்து நான் உஜ்ஜீவிக்கும் வகையை உணர்ந்திடுமாறு அடிமைத்தனத்துக்கு அனுகூலமாம்படி அதைத் திருத்தியருள வேணும்.

பிதா த்வம் மாதா த்வம் தயித தநயஸ் த்வம் ப்ரிய
ஸுஹ்ருத், த்வமேவ த்வம் மித்ரம் குருரஸி கதிஶ்சா
ஸி ஜகதாம் । த்வதீயஸ் த்வத்ப்ருத்யஸ் தவ பரிசரஸ் த்வ
த்கதிரஹம், ப்ரபந்நஶ் சைவம் ஸத்யஹமபி
தவைவாஸ்மி ஹி பர: ॥ 60 ॥

அத்தனுநீ யன்னையுநீ செகத்திற் கெல்லா
மருமகவு மித்திரனு மிதனுநீயே
வித்தகமாங் குருநீயே கதியுநீயே
வினையேனு நின்னடிமை கதிவேறில்லே
னுத்தமமா முன் பணிகள் பலவுஞ்செய்ய
வுரியேனா னுனையடைக்கலம் புகுந்தே
னெத்திறனு மிலனாயு னிணக்கங் கொண்டே
னினியானு முனக்கேயாம் பாரந்தானே. (60)

(க-ரை.) இவ்வுபய விபூதிகளுக்குள்ளடங்கிய எல்லாச் செகங்களுக்கும் தந்தை நீ; தாய் நீ; அருமையான புத்திரன் நீ; மித்திரன் நீ: ஹிதனும் நீ; ஆசார்யனும் நீ; அடையவேண்டிய கதியும் நீயே. அடியேன் உன்னுடைய சேஷபூதன்; ஊழியன்: உன்னால் போஷிக்கத்தக்கவன்: எத்திறனுமில்லேனாய் உன்னையே கதியாக அடைந்துள்ளேன். ஆகையால் என்னை ரக்ஷிக்கும் பாரம் உன்னுடையதே.

𑌜𑌨𑌿𑌤𑍍𑌵𑌾𑌹𑌂 𑌵𑌂𑌶𑍇 𑌮𑌹𑌤𑌿 𑌜𑌗𑌤𑌿 𑌖𑍍𑌯𑌾𑌤𑌯𑌶
𑌸𑌾𑌂, 𑌶𑍁𑌚𑍀𑌨𑌾𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍁𑌣𑌪𑍁𑌰𑍁𑌷𑌤
𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌵𑌿𑌦𑌾𑌮𑍍 । 𑌨𑌿𑌸𑌰𑍍𑌗𑌾𑌦𑍇𑌵 𑌤𑍍𑌵𑌚𑍍𑌚𑌰𑌣𑌕𑌮𑌲𑍈
𑌕𑌾𑌨𑍍𑌤𑌮𑌨𑌸𑌾𑌂, 𑌅𑌧𑍋𑌽𑌧𑌃 𑌪𑌾𑌪𑌾𑌤𑍍𑌮𑌾 𑌶𑌰𑌣𑌦 𑌨𑌿𑌮𑌜𑍍𑌜𑌾
𑌮𑌿 𑌤𑌮𑌸𑌿 ॥ 61 ॥

பூதல மெங்கும் பரவும் புகழ் பெற்றோராய்
புனிதரு நித்திய யோகம் புரிவோர் தாமாய்
கோதில தாய்க் குணபுருட தத்துவத்தின்
குறிப் புணர்ந்து சனன முதலியற்கை கொண்டு

மாதவ நின் மலரடிபால் நிலைத்து நின்ற
மன முடையோர் தஞ்சிறந்த மரபிற் றோன்றி
ஏதமுறு மிருட்பிரகி ருதியிலாழ் வே
னெட்டாமே சரணியமா பாவி நானே. (61)

(க - ரை) ஜகத் பிரஸித்தமான கீர்த்தியை யுடைய வர்களாய், மகா பரிசுத்தாத்மாக்களாய், உன்னுடன் நித்ய யோகத்தை அபேக்ஷித்தவர்களாய், சித், அசித், ஈச்வரர்க ளுடைய ஸ்வரூப ஸ்வபாவ ஸம்பந்தங்களை அறிந்தவர்களாய் ஜனன காலந்தொடங்கி இயற்கை யாகவே உன்திருவடித் தாமரைகளில் நிலைத்து நின்ற மனதை யுடையவர்களாய் விளங்கும் உத்தமர்களுடைய திருவம்சத்திலே ஜனித்து, ஆபாஸமான இருள் நிறைந்துள்ள இந்த பிரகிருதியில் நீச்சு நிலையற்று அமிழ்ந்து கிடக்கின்றேன். மகாபாவியேன்! ஏ! சரண்யனே!

அமர்யாத꞉ க்ஷுத்ரஶ்சலமதிரஸூயாப்ரஸ
வபூ꞉, க்ருதக்⁴னோ து³ர்மானீ ஸ்மரபரவஶோ வ
ஞ்சனபர꞉ । ந்ருஶம்ஸ꞉ பாபிஷ்ட²꞉ கத²மஹமிதோ
து³꞉க²ஜலதே⁴ரபாராது³த்தீர்ணஸ்தவ பரிசரே
யம் சரணயோ꞉ ॥ 62 ॥

நீதி நெறி நீத்தவ னே னீசனேனே [றேன்
னிலையின் மதியேன் பொறுமைக் கிடமாய் நின்
பாதகனே னிறுமாந்தே னன்றி கொன்றேன்
படுங்காமனுக்குப் பரவசனே யானேன்
கோதுடைய வஞ்சகனேன் குரூரநெஞ்சன்
கொடும் பாவியாமடியேன் குணிக்க வொண்ணு
வேத முறு மிக்கேதக் கடல் கடந்தே
யெங்ஙனநின்னடியிணையிற் பணிசெய்வேனே.

(க - ரை) ஸன்மார்க்கத்தைத் துறந்தவனாய், நீசமான விஷயங்களில் சபல முடையேனாய், நிலையாது எப்போதும் சஞ்சலிக்கும் புத்தியுடையேனாய், பொறுமைக்கு உற்பத்தி ஸ்தானமானவனாய், நன்றி கொன்றவனாய், மகாபாதகனாய், அகங்காரியாய், காமவசத்தனாய், வஞ்சகனாய், குரூரமுள்ளவனாய், பாவத்தில் நிலைத்தவனாய் நின்ற நான் கரைகாண முடியாத இந்தத் துன்பக்கடலினின்றும் எப்படி கரையேறி உன் திருவடிகளில் கைங்கர்யம் பண்ணப் போகின்றேன்?

ரகுவர யதபூ: ஸ்த்வம் தாத்ருஶோ வாயஸஸ்ய
ப்ரணத இதி தயாளு: யச்ச சைத்யஸ்ய க்ருஷ்ண।
ப்ரதிபவ மபராத்து: முக்த ஸாயுஜ்யதோ பூ:
வத கிமபத மாகஸ்தஸ்ய தேஸ்தி க்ஷமாயா: ॥ 63 ॥

அத்தகைய காகனையு மன்றளித்தா
யடி பணிந்தா னெனவிரகு திலகராமா
மொய்த்த பவந் தொறும் பிழையே முடித்துவந்த
மூர்க்கன் சிசு பாலனுக்குங் கண்ணா! வந்நா
ளுத்தமமா மோர்பதவி யுதவினா யு
னைப் பிலதாம் பொறுமைக் கோரிலக்காகாத
வெத்தகைய வபராத மெங்குதானு
மிசைந்துளதோ வெந்நாத வியம்பு வாயே. (63)

(க - ரை) ஏ! ரகூத்தமா! அத்தன்மைத்த மஹா அபராதியான காகாசுரன் கீழேவிழ அவனை சரணாகதிபண்ணினவனாகக் கொண்டு ரக்ஷித்தாய். ஜன்மந்தோறும் அபராதமே செய்து நின்ற அந்த சிசுபாலனுக்கும் ஏ! கண்ணபிரானே! ஸாயுஜ்ய பதவியைத் தந்தருளினை. ஆதலால் உன் க்ஷமா குணத்தால் (ஆச்ரிதா பராதங்களை அறியாதவன்போ லிருக்கும் தன்மையினால்) முக்த (ஸ்பூ) னானவனே! இவ்வித

மான உன்னுடைய பொறுமைக்கும் அகப்படாமல் விலக்காண எந்த அபராதமேனும் எங்காயினும் இருக்கின்றதோ? ஏ! நாத! அருளிச்செய்வாய்.

நநு ப்ரபந்ந꞉ ஸக்ருதேவ நாத
தவாஹமஸ்மீதி ச யாசமாந꞉ ।
தவாநுகம்ப்ய꞉ ஸ்மரத꞉ ப்ரதிஜ்ஞாம்
மதேகவர்ஜம் கிமிதம் வ்ரதம் தே ॥ 64 ॥

ஒருமுறை யுனக்கடைக்க
லம்புகுந் துனக்கே யான
வுரிமையை யுடையேனாக
வேண்டு நான் சபதமுன்னி
யருளுநின் னருட்கிலக்கா
யாகுவன் னாத நின்னிவ்
விரதமென் னொருவனைத்தான்
விலக்கியே யொழிக்குங் கொல்லோ. (64)

(க - ரை) ஏ! நாத! ஒருதரம் உனக்கடைக்கலம் புகுந்து உனக்கே சேஷபூதனாகின் றேன் என்று பிரார்த்திக்கும் அடியேன் (தென்கடற் கரையில் செய்தருளிய) ப்ரதிஜ்ஞையை நினைத்து உன் கிருபைக்குப் பாத்ரனாகின்றேன். இப்படிப்பட்ட உன் சங்கற்பமானது அடியேன் ஒருவனை மாத்திரம் விலக்கி யொழித்து விடுமோ? (ஒருக்காலு மொழியாது).

அக்ருத்ரிமத்வச்சரணாரவிந்த
ப்ரேமப்ரகர்ஷாவதிமாத்மவந்தம் ।
பிதாமஹம் நாதமுநிம் விலோக்ய
ப்ரஸீத மத்வ்ருத்தமசிந்தயித்வா ॥ 65॥

இயற்கையி லிசைந்திலங்கு
நின்மலரடி யின்பத்தி
வியப்பினுக் கெல்லையாமென்
வித்தகப் பாட்டனாராம்
நயப்புறும் ஸ்ரீமந்நாத
முனிகளைக் கடைக் கணித்தென்
கயப்புறுங் காதை நோக்காக்
கனிவுடனருளு வாயே. (65)

(க - ரை) இயற்கையினாலேயே உண்டான உன் திருவடிக்கணுற்ற பக்தியின் விசேஷத்துக்கு எல்லை போன்றவரும் ஆத்மஜ்ஞான முடையவரும் (ஜன்மத்தாலும் ஞானத்தாலும்) எனக்குப் பாட்டனருமான ஸ்ரீமந் நாத முனிகளைக் கடாக்ஷித்து அடியேனுடைய கைப்புண்டாக்கும் ஹீன சரித்திரங்களைப் பாராது அடியேனபராதங்களைப் பொறுத்து அன்புகூர்ந்தருள வேண்டும்.

ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

ஸம்பூர்ணம்.

PRINTED AT THE GUARDIAN PRESS, MADRAS.

6A
2-113